திருமறைக் கலாமன்றத்தினரின்




நீ. மரியசேவியர்

V. J. Constantine
28/1, ST. JAMES WEST STREET
JAFFNA

# அன்பில் மலர்ந்த
# அமர காவியம்

★

இயேசுவின் திருப்பாடுகளின் காட்சிகள் அடங்கிய

இசை - உரை - நாடகச் சித்திரம்

★

எழுதியவர் : நீ. மரியசேவியர்

★

உரிமை : திருமறைக் கலாமன்றம்

## படிப்பவர்க்கு:

அகரத்தில் அமலனைக் கண்டவன் அறிவு படைத்த தமிழன். 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' அகர வரிசையிலே அன்னை உண்டு — அழகு உண்டு — அறிவு உண்டு — அருள் உண்டு — ஆக்க அன்பும் உண்டு. 'அன்பே தெய்வம்' என்பர்...

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள்? அதன் இலக்கணமாக — இலக்கியமாக — இலட்சியமாக இலங்குகின்றது இறைமகன் கிறீஸ்துவின் நிறைவான வாழ்க்கை. தந்தை மடியில் அன்பின் ஒளியாகத் திகழ்ந்தவர் — சாவின் பிடியில் அன்பின் பழியாக இறந்தவர் — அன்பின் வடிவில் — அன்பின் மொழியையே மலர்ந்தார். சத்தியத்தின் அருட்சாரம் — சகவாழ்வின் திருச்சாரம் — நித்தியத்தின் பொருட்சாரம் — நிதம் அன்புக் குணச் சாரம்.

இன்பப் பெருக்காம் இறைவன் அன்பின் இருப்பிடம். அன்பின் பிறப்பிடம் — அன்பின் வடிவம். அன்பே மயம். அவரது வாழ்வுதான் அன்பில் மலர்ந்த அமர காவியம்.

நீ. மரியசேவியர்



# காட்சியும்
# சாட்சியும்

V. J. Constantine
28/1, St. JAMES WEST STREET
JAFFNA

அன்பில் மலர்ந்த அமர காவியத்தின்
அடிப்படைச் சான்றுகள் ...............

# அறிமுகம்

என் பெயர் அருளப்பன். நான்காவது நற்செய்தி ஏட்டை நான்தான் எழுதினேன். ''யேசுவின் அன்புச் சீடன்'' என என்னை அழைப்பார்கள்.

— அருளப்பன்

ஆயக்காரனாக இருந்த என்னை ஆண்டவன் அருள் அமலன் கிறீஸ்துவின் அரிய சீடனாக மாற்றியது. கண்ணால் கண்டதைத்தான் சொல்கிறேன்.

— மத்தேயு

யேசுவின் தலைமைச்சீடன் இராயப்பர்தான் எனது குரு. அவரிடமிருந்து அறிந்தவைகளே நான் குறிப்பிடுபவை.

— மாற்கு

மருத்துவனாகிய நான் மகத்தான கடவுள் கிறீஸ்துவின் மனு உருத்தரித்த வாழ்வை புனித சின்னப்பர் போதித்தபடி கேட்டு உண்மையுடன் உரைக்கின்றேன்.

— லூக்காஸ்

# கிறீஸ்துவின் பிறப்பு

## அருளப்பர் தொடங்குகிறார் :

ஆதியிலே வார்த்தை இருந்தார் ; அவ்வார்த்தை கடவுளோடு இருந்தார் ; அவ்வார்த்தையும் கடவுளே ; அதேவார்த்தை மனுவுருவானார் ; நம்மிடையே குடிகொண்டார் ; அவரது மாட்சியைக் கண்டோம்.

## லூக்காஸ் தொடர்கிறார் :

சீரியா நாட்டைச் சீரேனியுஸ் ஆண்ட காலத்தில் குடிக்கணக் கெடுக்கப்பட்டது. அனைவரும் பெயரைப் பதிவுசெய்யத் தத்தம் ஊருக்குச் சென்றனர். சூசையும், கர்ப்பவதியான மனைவி மரியாளோடு பெயரைப் பதிவுசெய்யப் பெத்தலேகம் நகருக்குச் சென்றார். பேறுகாலம் நேரிடவே தலைப்பேறான மகனை ஈன்றெடுத்தாள். இடையர்கள் தங்கள் கிடைக்குச் சாமக் காவல் காத்துக்கொண்டிருந்தனர். தேவதூதன் அவர்களுக்குத் தோன்றி ''இதோ மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் ; இன்று தாவீதின் ஊரிலே மீட்பர் பிறந்துள்ளார் ; அவரே ஆண்டவராகிய கிறீஸ்து ; என்றார்.

## மத்தேயு உரைக்கின்றார் :

ஏரோது அரசன் காலத்தில் யேசு பிறந்திருக்க ஞானிகள் மூவர் கீழ்த்திசையிலிருந்து யெருசலேமுக்கு வந்து, ''யூதர்களின் அரசன்'' பிறந்திருக்கின்றாரே அவர் எங்கே? ஏனெனில் கீழ்த்திசையில் விண் மீனைக் கண்டு அவரை வணங்க வந்தோம் என்றார்கள். ஏரோது அரசனுக்குக் கலக்கம் உண்டாயிற்று. மறைநூல் அறிஞர்களைக் கூப்பிட்டு மெசியாஸ் எங்கே பிறப்பார் என்று விசாரித்தான். ''பெத்தலேகமே யூதாவின் நகரங்களிலே சிறிதே அல்லை ; ஏனெனில் உன்னிடமிருந்தே தலைவர் தோன்றுவார். அவர் எம் மக்கள் இஸ்ராயேலை மேய்ப்பார்.'' என்று தீர்க்கதரிசி எழுதியுள்ளார் என்றார்கள். ஏரோது ஞானிகளை அழைத்து நீங்கள் சென்று குழந்தையைப்பற்றி ஆராய்ந்து பாருங்கள். அவரைக் கண்டபின் எனக்குத் தெரிவியுங்கள் என்றான். அவர்கள் புறப்பட்டுப்போய் பிள்ளையைக் கண்டு வணங்கினர். ''ஏரோதிடம் மீண்டும் செல்ல வேண்டாம்" என்று கனவில் எச்சரிக்கப்பட்டு வேறு வழியாக வீடு சென்றனர் இதோ ஆண்டவரின் தூதன் சூசைக்குக் கனவில் தோன்றி'' பிள்ளையையும் தாயையும் அழைத்துக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போம் ; ஏனெனில் குழந்தையைக் கொல்ல ஏரோது தேடுகிறான்" என்றார் இவ்வாறு ''எகிப்திலிருந்து என் மகனை அழைத்தேன்'' என்று தீர்க்கதரிசிகள் வாயிலாக ஆண்டவர் கூறியது நிறைவேறவேண்டியதாயிருந்தது

**மாற்கு மொழிகின்றார் :**

அந் நாட்களிலே இயேசுக் கிறீஸ்து கலிலேயாவிலுள்ள நசரேத் தூரிலிருந்து வந்து அருளப்பரிடம் ஞானஸ்நானம் பெற்றார். அப்பொழுது, ''நீரே எனது அன்பார்ந்த மகன் ; உம்மிடம் நான் பூரிப்படைகிறேன்'' என்று வானத்திலிருந்து குரலொலி உண்டா யிற்று. பரிசுத்த ஆவியினால் வனாந்தரத்திற்கு அனுப்பப்பட்டு சாத்தா னால் சோதிக்கப்பட்டார். ''காலம் நிறைவேறியது ; கடவுள் அரசு நெருங்கிவிட்டது ; மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்'' என்று போதிக்கத் தொடங்கினார்.

## கிறீஸ்துவின் வாழ்வு

**மத்தேயு முன் சொல்ல :**

கலிலேயாக் கடலோரமாக நடந்துசெல்லுகையில் சீமோனும், பிலவேந்திரனும் வலை வீசிக்கொண்டிருக்கும்போது யேசுநாதர் அவர் களைக் கண்டார். ''என் பிறகே வாருங்கள்'' என்றார். அவர்கள், தங்கள் வலைகளைவிட்டு அவரைப் பின்சென்றார்கள். அப்பாற் சென்று யாகப்பரையும், அருளப்பரையும், வேறு இரு சகோதரர்களையும் அழைத்தார். யேசு கலிலேயா எங்கும் போதித்து விண்ணரசின் நற் செய்தியை அறிவித்து மக்களிடையே எல்லா நோயையும் பிணி யையும் குணமாக்கிவந்தார். அவரைப்பற்றிய பேச்சு சீரியா முழு வதும் பரவியது. பல்வேறு நோய்களையும் பேய்பிடித்தோரையும் குணமாக்கி இறந்தோரை உயிர்ப்பித்தும் வந்தார். அதனால் மக்கள் கூட்டம் கூட்டமாகப் பின்தொடர்ந்தனர்.

**அருளப்பர் பின்சொல்ல :**

யேசு போய்க்கொண்டிருக்கும்போது பிறவிக் குருடன் ஒரு வனைக்கண்டார். ''ராபி'' இவன் குருடனாகப் பிறக்க யார் பாவம் செய்தது? இவனா? இவனுடைய பெற்றோரா? என்று அவருடைய சீடர் அவரை வினவினர். யேசு, இவனும் பாவம் செய்யவில்லை, இவனுடைய பெற்றோரும் பாவம் செய்யவில்லை. கடவுளுடைய செயல்கள் இவன்மட்டில் வெளிப்படும்பொருட்டே இப்படிப் பிறந் தான் பின், தரையில் உமிழ்ந்து உமிழ்நீரால் சேறுண்டாக்கி அச் சேற்றை அவனது கண்கள்மேல பூசி அவனை நோக்கி நீ போய் சிலாவே குளத்தில் கழுவு என்றார் ; அவன் போய்க் கழுவினான். பார்வை யோடு திரும்பினான்.

**லூக்காஸ் துதிசொல்ல :**

நயீம் என்னும் பட்டினத்தில், அவருடைய சீடர்களும். திர ளான சனங்களும் சென்றுகொண்டிருந்தனர். அப்பொழுது இறந்த

ஒருவனைத் தூக்கிவந்தனர். தாய்க்கு அவன் ஒரே பிள்ளை; அவளோ கைம்பெண். அவளைக் கண்டு ஆண்டவர் மனமிரங்கி, அழாதே என்று முன்சென்று பாடையைத் தொட்டு, ''இளைஞனே! உனக்கு நான் சொல்லுகிறேன் எழுந்திரு'' என்றார். இறந்தவன் உட்கார்ந்து பேசத்தொடங்கினான். அனைவரையும் அச்சம் ஆட்கொள்ள; ''நம்மிடையே இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார்'' கடவுளும் தம் மக்களைத் தேடிவந்தார்'' என்று கடவுளை மகிமைப்படுத்தினார்கள்.

## மாற்கு இதைச் சொல்லுகிறார் :

யெனசரேத்துக்குவந்து கரைசேர்ந்தனர். அவர்கள் படகை விட்டு இறங்கியதும் மக்கள் அவரை அறிந்துகொண்டு அந்நாடெங்கும் விரைந்துபோய் அவர் இருக்கிறார் என்று கேள்விப்பட்ட இடங்களுக்கு நோயாளிகளைப் படுக்கைகளில் கொண்டுவரத் தொடங்கினர். அவர் எங்கு சென்றாலும் பொது இடங்களில் நோயாளிகளைக் கிடத்தி அவருடைய போர்வையின் விளிம்பையாகிலும் தொடும்படி அவரை வேண்டுவர். அவரைத் தொட்ட அனைவரும் குணம் பெறுவர்.

# கிறீஸ்துவின் பாடுகள்

## மத்தேயுமலர்வது :

( உலகவாழ்வின் இறுதிக்கட்டத்தில் )

யேசு தம் சீடருடன் பந்தி அமர்ந்தார். அவர்கள் உண்ணும் பொழுது ''உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்'' என்றார். அவர்கள் மிகவும் வருந்தி, ''நானோ? ஆண்டவரே'' என்று ஒவ்வொருவரும் கேட்கத் தொடங்கினர். அதற்கு அவர், என்னோடு பாத்திரத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான்; மனுமகன் தம்மைப்பற்றி எழுதியிருக்கிறபடியே போகிறார். மனுமகனைக் காட்டிக்கொடுக்கிறவனுக்கோ ஐயோ கேடு; இவன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாயிருக்கும்'' என்றார், பின்பு யேசு அப்பத்தை எடுத்து ஆசீர் கூறி, பிட்டு தம் சீடருக்கு அளித்து, ''இது என் உடல்'' என்றார். பின்னர் கிண்ணத்தை எடுத்து நன்றிகூறி ''இதிலே அனைவரும் பருகுங்கள், ஏனெனில் உடன்படிக்கைக்கான பாவ மன்னிப்புக்கென்று பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம். இதுமுதல் என் தந்தையின் அரசில் புதிய இரசம் உங்களோடு பருகும்நாள்வரை இந்தத் திராட்சைப் பலனைக் குடிக்கமாட்டேன்.'' ''இன்றிரவே என்னைக் குறித்து நீங்கள் அனைவரும் இடறல்படுவீர்கள்'' என்றார். பின்னர் யேசு அவர்களுடன் ஜெத்சமனித் தோட்டத்திற்கு வந்தார். "என்

தந்தையே! இக் கிண்ணம் நான் குடித்தால் ஒழிய அகல முடியா தெனில் உமது விருப்பப்படியே ஆகட்டும்'' என்று செபித்தார்.

## அருளப்பர் அருள்வது :

யூதாஸ் படைவீரர்களையும், தலைமைக் குருக்களும், பரிசேயரும் அனுப்பிய காவலர்களையும் அழைத்துக்கொண்டு வந்தான். யேசு முன்சென்று; ''யாரைத் தேடுகிறீர்கள்'' என்று கேட்டார். அவர்களோ ''நசரேத்தூர் யேசுவை'' என்று சொல்ல, யேசு, ''நான் தான்'' என்றார், சொன்னதும் அவர்கள் பின்வாங்கித் தரையில் விழுந்தனர். ''யாரைத் தேடுகிறீர்கள்'' என்று மீண்டும் அவர்களைக் கேட்டார். அவர்கள் ''நசரேத்தூர் யேசுவை'' என்று சொல்ல, யேசு, ''நான் தான் என்று உங்களுக்குச்சொன்னேனே, என்னை நீங்கள் தேடினால் அவர்களைப் போக விடுங்கள்" என்றார்.

## லூக்காஸ் வரைவது :

பின்னர் அவர்கள் அவரைப்பிடித்து தலைமைக் குருவின் இல்லத்திற்குக் கூட்டிச் சென்றனர். பொழுது விடிந்ததும் ஆலோசனைக் குழுக்கள் ஒன்றுகூடித் தங்கள் நீதிமன்றத்துக்கு அவரைக் கூட்டிக் கொண்டுபோய், ''நீர் மெசியாவானால் எங்களுக்குச் சொல்லும்'' என்றனர். அவர் அவர்களை நோக்கி, நான் உங்களுக்குச் சொன்னால் நீங்கள் என்னை நம்பமாட்டீர்கள். இனிமேல் மனுமகன் வல்லமை உள்ள கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருப்பார்" என்றார். அனைவரும்; அப்படியானால் நீர் ''கடவுளின் மகனா?'' அதற்கு அவர், ''நான் கடவுளின் மகன் என்று நீங்களே சொல்லுகிறீர்கள்'' என்றார்: அவர்களோ, ''இன்னும் எமக்குச் சாட்சியம். எதற்கு? இவன் வாயிலிருந்தே இதைக் கேட்டோம்" என்றனர். எல்லோரும் கூட்டமாக எழுந்து பிலாத்துவிடம் அவரைக் கூட்டிச் சேசாருக்கு வரி செலுத்தக்கூடாதென்றான்'' என்று அவர்மேல் குற்றம் சாட்டத் தொடங்கினர். ''நீ யூதரின் அரசனோ? என்று பிலாத்து வினவ யேசு, ''நீர்தான் சொல்லுகிறீர்'' என்றார். அப்பொழுது பிலாத்து தலைமைக் குருக்களையும், மக்களையும் நோக்கி, ''இவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன்'' என, அவர்கள் கலிலேயா தொடங்கி இவ்விடம்வரை யூதேயா எங்கும் போதித்து மக்களிடையே கிளர்ச்சி செய்கின்றான் என்று கூறினர். பிலாத்து இவன் கலிலேயனா என்று வினவி, ஏரோதன் அதிகாரத்துக் குட்பட்டவன் என்று அறிந்ததும், ஏரோதிடம் அவரை அனுப்பினான். ஏரோது யேசுவைக் கண்டபொழுது மிக்க மகிழ்ச்சியுற்றான். ஏனெனில். அவர் அருஞ்செயல் ஏதாவது செய்யக் காணலாம் என்று அவரைப் பார்க்க நெடுநாளாக ஆவலாயிருந்தான். பற்பல கேள்விகளை அவரிடம் கேட்டான். அவரோ அவனுக்கு மறுமொழி கூறவில்லை. ஏரோது தன் படைகளோடு

சேர்ந்து அவரை அவமானப்படுத்தி. அவருக்குப் பகட்டான உடை அணிவித்து பிலாத்துவிடம் திருப்பி அனுப்பினுன். அதுவரை ஒருவரோடொருவர் பகைமை கொண்டிருந்த ஏரோதும், பிலாத்தும் அன்றே நண்பராயினர். பிலாத்து எல்லா மக்களையும் ஒன்றுகூட்டி, மக்களிடையே குளப்பம் உண்டாக்குபவன் என்று இவனை என்னிடம் கொண்டுவந்தீர்களே! இதோ நீங்கள் சாட்டுகிற குற்றங்களிலே ஒன்றும் இவனிடம் காணவில்லை. சாவுக்குரியதொன்றும் இவன் செய்யவில்லை, ''தண்டித்து விடுதலைசெய்வேன்'' என்றுன். அவர்களோ ''அவனைச் சிலுவையில் அறையும்' என்று கத்தினர். அவர்கள் கேட்டபடியே ஆகட்டும் என்று பிலாத்து தீர்ப்பளித்தான். அவரைக் கூட்டிச்செல்லும்போது, திரளான மக்களும், புலம்பும் பெண்களும் அவரைப் பின்தொடர்ந்தனர். மண்டை ஓடு எனப்படும் இடத்திற்கு வந்தபிறகு அவரையும் வலப்பக்கத்தில் ஒருவனும் இடப்பக்கத்தில் மற்றவனுமாக இரு குற்றவாளிகளையும் சிலுவையில் அறைந்தனர் யேசு, ''தந்தையே, அவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லை,'' என்று சொன்னுர். தலைவர்களும், ''இவன் கடவுளின் மெசியாவும், தெரிந்தெடுக்கப்பட்டவருமானுல் தன்னையே காப்பாற்றிக்கொள்ளட்டும்'' என்று ஏளனம் செய்தனர்; ''இவன் யூதரின் அரசன்'' என்று எழுதியிருந்த பலகையை அவர் தலைக்குமேல் வைத்திருந்தனர். சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன் ''நீ மெசியா அல்லவா? உன்னையும் என்னையும் காப்பாற்று' என்று பழித்தான். மற்றவனே, ''கடவுள்மட்டில் உனக்கு அச்சமே இல்லையா? நாம் தண்டிக்கப்படுவது முறையே. ஏனெனில் நம் செயல்களுக்குத்தக்க பலனைப்பெறுகிறேம். இவரோ ஒரு குற்றமும் செய்யவில்லை.'' என்று அவனைக் கடிந்து கொண்டான். யேசுவே, உம் அரசுக்கு வரும்போது என்னை நினைவுகூரும்" என்றுன். யேசு, "இன்றே நீ என்னேடு வான்வீட்டில் இருப்பாய் என்று நான் உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன்" என்றுர்.

## மாற்கு குறிப்பது :

நண்பகல்முதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. யேசு, எலோயி, எலோயி, லாமா சபக்தானி" என்று உரக்கக் கூவினுர். என் கடவுளே என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர் என்பது பொருள். அருகிலிருந்தவர்களுள் சிலர் ''இதோ! இவன் எலியாசை அழைக்கிறுன்'' என்றனர். ஒருவன் ஓடிப்போய்க் கடற்காளானைக் காடியில் தோய்த்து, ஒரு கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக்கொடுத்து, ''பொறுங்கள், எலியாஸ் இவனைக் கீழே இறக்க வருவாரா பார்ப்போம்'' என்றுன். யேசு, உரக்கக் கூவி உயிர் நீத்தார். நூற்றுவர் தலைவன் இவ்வாறு இவர் உயிர் நீத்ததைக் கண்டு ''உண்மையில் இம் மனிதன் கடவு

ளின் மகனாய் இருந்தவரே'' என்றான். இதற்குள் மாலைநேரம் ஆகி விடவே, அரிமத்தேயாவூர் சூசை துணிவுடன் பிலாத்துவிடம் சென்று யேசுவின் உடலைக் கேட்டார். யேசு அதற்குள் இறந்துவிட்டதைப் பற்றி பிலாத்து வியப்புற்றான். அறிந்ததும், சடலத்தைச் சூசையிடம் அளித்தான். சூசை, அவரைக் கோடித்துணியில் சுற்றி, பாறையில் குடைந்த கல்லறையில் வைத்து அதன் வாயிலில் ஒரு கல்லை உருட்டிவைத்தார்.

# கிறிஸ்துவின் வெற்றிச் சிறப்பு

## மாற்கு சான்றுரைக்க :

ஓய்வுநாள் கழிந்ததும் மதலேன் மரியாளும், மரியாளும், சலோமேயும் கல்லறைக்கு வந்தனர். கல்லறை வாயிலிருந்து யார் எமக்கு கல்லைப் புரட்டிவிடுவர்? என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டனர். நிமிர்ந்து பார்க்கும்பொழுது கல்புரட்டப்பட்டிருப்பதைக் கண்டனர். அவர்கள் கல்லறைக்குள் புகுந்தபோது வெண்ணுடை அணிந்து வலப்பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு இளைஞனைக் கண்டு திகிலுற்றனர். அவன் அவர்களை நோக்கி, ''திகிலுறவேண்டாம். சிலுவையில் அறையுண்ட நசரேத்தூர் யேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்துவிட்டார். இங்கேயில்லை. நீங்கள் போய் அவருடைய சீடர்களிடமும், இராயப்பரிடமும் உங்களுக்கு முன் அவர் கலிலேயாவிற்குப் போகிறார் என்று சொல்லுங்கள்'' என்றான். அவர்கள் வெளியே வந்து கல்லறையை விட்டு ஓடினார்கள். ஏனெனில் திகைப்பும் நடுக்கமும் அவர்களை ஆட்கொண்டது.

## லூக்காஸ் பக்கபலம் அளிக்க :

திரும்பிவந்த பெண்கள் பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் அறிவித்தனர். பெண்கள் கூறியது வெறும் பிதற்றலாகத் தோன்றியதால் அவர்கள் நம்பவில்லை. இராயப்பரோ கல்லறைக்கு ஓடினார். நிகழ்ந்ததை குறித்து வியந்து கொண்டே வீடு திரும்பினார்.

## மத்தேயு எள்ளி நகைக்க :

இதோ! காவலருட் சிலர் நகருக்குள் வந்து நிகழ்ந்தவை அனைத்தையும் தலைமைக் குருக்களிடம் தெரிவித்தனர். அவர்கள் ஆலோசனைசெய்து படைவீரருக்கு நிறையப் பணம் கொடுத்து, ''நாங்கள் தூங்கிக்கொண்டிருக்கையில் அவர் சீடர் இரவில் வந்து அவரைத் திருடிச்சென்றனர், என மக்களுக்குச் சொல்லுங்கள். ஆளுநரின் காதுக்கு அது எட்டுமானால் அவரிடம் சொல்லி உங்களுக்கு ஒரு தொந்தரவும் வராதபடி நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம் என்றனர்.

அவர்களும் பணத்தை வாங்கிக்கொண்டு தங்களுக்குச் சொல்லிக் கொடுத்தபடி செய்தார்கள்.

## அருளப்பர் முடிக்கின்ருர் :

யேசு வந்து அவர்களிடையே நின்று, ''உங்களுக்கு சமாதானம்'' என்ருர். அவர்களுக்குத் தம் கைகளையும் விலாவையும் காட்டினுர். சீடர்கள் மகிழ்ச்சியுற்றனர். மீண்டும் அவர்களை நோக்கி, ''என் தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகின்றேன்.'' அவர்கள்மேல் ஆவியை ஊதி ''பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள், எவருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்களுக்கு அவை மன்னிக்கப்பெறும். எவருடைய பாவங்களை மன்னியாது விடுவீர்களோ, அவை மன்னிப்பின்றி விடப்படும்'' என்ருர். திதிமுஸ் என்ற தோமையார் யேசு வந்தபோது அவர்களோடு இல்லை. மற்றச் சீடர்கள் அவரிடம், ''ஆண்டவரைக் கண்டோம்'' என்றதற்கு அவர், ''அவருடைய கைகளில் ஆணியால் உண்டான தழும்பைப் பார்த்து, ஆணிகள் இருந்த இடத்தில் என் விரலை விட்டு அவர் விலாவில் என் கையை இட்டாலொழிய விசுவசிக்க மாட்டேன்'' என்ருர். எட்டுநாளுக்குப்பின் அவருடைய சீடர் மீண்டும் வீட்டில் இருந்தனர். தோமையாரும் அவர்களோடுஇருந்தார். யேசு வந்து அவர்களிடையே நின்று தோமையாரை நோக்கி, ''இங்கே உன் விரலையிடு. விசுவாசம் அற்றவனுய் இராதே, விசுவாசங்கொள்'' என்ருர். அப்போது தோமையார் அவரை நோக்கி, ''என் ஆண்டவரே என் இறைவனே'' என்ருர். யேசுவோ ''என்னைக் கண்டதால் விசுவாசங்கொண்டாய். காணுமல் விசுவசிப்பவர்கள் பேறுபெற்ருேர்'' என்ருர். பின்னர் யேசு திபேரியாக் கடலருகே தோன்றினுர். பின் சீமோன் இராயப்பரை நோக்கி, ''இவர்களைவிட நீ எனக்கு அதிகமாக அன்பு செய்கிருயா?'' என்று கேட்டார். ''ஆம் ஆண்டவரே'' என்ருர். ''என் ஆட்டுக்குட்டிகளை ஊட்டி வளர்ப்பாய்'' இதைச் சொன்னபின் ''என்னைப் பின்செல்'' என்ருர்.

பின்னர் பெத்தானியாவை நோக்கி, அவர்களைக் கூட்டிச்சென்று அவர்களுக்கு ஆசீர் அளித்தார். ஆசீர் அளிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து வானகத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெற்ருர்.

அன்பே தெய்வம்—அவரது மாட்சி கண்டோம்.

**வணக்கம்!**

### முன் காட்சி

# அனைத்தையும் படைக்கும் அற்புத அன்பு

**காப்பு :**

அன்பெனும் உருவாய் நிற்கும்
அமலனே அருளே போற்றி
அன்புயர் பொருளாய் இன்பம்
அலர்ந்த நல் அமுதே போற்றி
அன்பிலே அன்பாய் மூன்று
ஆள் வடிவுடையாய் போற்றி
அன்பிற்கு ஊற்றாய் என்றும்
அமர்ந்த எம் அன்பே போற்றி!

**பாடல் :**

கதி தரவே கனிவாய் இதமாய்
கதி தரவே கனிவாய்

பரம் பொருள் மெய்யான திரு உன்னைப் பணிய
வரம் பல தர எங்கள் பாவினில் அணிய
கதி தரவே கனிவாய்

மேக திரைகளில் கானமதோட
இக பர இறைவன் உன் வெற்றியே பாட
பாவமும் சாபமும் அழிந்து திண்டாட
கருணையின் தேவனை துதித்து மன்றாட ......
கதி தரவே கனிவாய்

**உரை :** காலம் கடந்து, கருத்துக் கடந்து, ஆதியும் அந்தமும் அற்ற அற்புத நிலையில் இறைவன் நிறைவிலே இருந்து வந்தார். பரம் பொருளாக இருந்தார். முழுமையில் மூவராய் இருந்தார். அன்பே வடிவாக இருந்தார். இன்பப் பெருக்காக இருந்தார்.

அன்பே தெய்வம். அத்தெய்வ அன்பு படைக்கின்றது. காலத்தை இழையோட விட்டது. நாளும் பொழுதும், வானும் முகிலும், நீரும் நிலமும் உருவாக்கப்பட்டன. பசும்புல் படர்ந்தது. பனி மலை தொடர்ந்தது. கதிரவனும் கலைமதியும், மான் இனமும் மீன் இனமும், கான்கொள் கனியும், கதிர்கொள் மணியும் கடவுள் கரத்தில் கலை உருவம் பெற்றன. இறுதியாய் படைப்

பின் சிகரமாக, பரமனின் சாயலாக மனிதன் மண்ணாலே ஆக்கப்பட்டான் ஆதாம் ஏவாள் தான் அந்த ஆதி மனிதர். சீரும் சிறப்பும் நிறைந்த சிங்காரத்தோப்பிலே, மண்ணிலே கண்குளிரும் இயற்கையுடன் இணைந்து விண்ணிலே எண்ணிறந்த தூதருடன் கலந்து, வான் இறையை வணங்குகின்றனர்.

பாடல் :

சாந்தி ! சாந்தி ! சாந்தி !
ஆ ... ஆ ஆ ...

தோகையரு

இறைவா எம் இதயத்தின் தலைவா—திரு
மறையா எம் உதயத்தின் முதல்வா

ல்லவி :

இறைவா எம் இதயத்தின் தலைவா—திரு
மறையா எம் உதயத்தின் முதல்வா.

அனு. பல்:

ஆதி இல்லாத பெரும் பரம் பொருளே—கலைச்
சோதி வல்லாய் அரிய வரம் அருளே.

சரணம் :

பூவில் நிறைந்த எழில் வளம் எழவே—பூங்
காவில் சிறந்த தொழில் உனைத் தொழவே—
சாவில் மறைந்த பழிப் பேய் விழவே—தமிழ்
பாவில் திறந்த இன்பத்தால் அழவே,
—இறைவா எம் இதயத்தின் தலைவா—திரு
மறையா எம் உதயத்தின் முதல்வா.

உரை : ஆனால், அந்தோ—மனுக்குலத்தின் மாற்றான் மருண்டெழுந்தான். பாம்பு உருவம் தரித்து பசப்பு வார்த்தை பேசி.

பேய் :

ஆண்டவன் போல் வாழ ஒருமனமோ
மாண்டழியாதிருக்கத் திருமனமோ
பொய் மெய்யும் தெளிவாகும் இருமனமோ
உய்கின்ற கனி உண்பாய் பெருமகளே ...

உரை : பாவம் பாருலகில் புகுந்தது.

பாட்டு :

திட்டித் திருகிடு திட்டித் திருகிடு
திட்டித் திருகிடவே
கொட்டும் இடிஒலி சொட்டும் எரிதணல்
பட்டுப் பார் அழிய
அட்டக்கரிநிழல் முட்டிப்படர
விருட்டிக் கெட்டழிய
தங்கப் புவியிது சிங்கப் பேய் அடி—
மங்கிப் பணிந்ததுவே.

உரை : பாவத்தின் விளைவால், பரமன் அன்பையும் அருளையும் இழந்து, இன்பமும் இயற்கைச் சுதந்திரமும் ஒழிந்து, பண்பு அழிந்து, படுகுழியில் வீழ்ந்து, பயங்கரமாய் பரிதவித்தான் பாரு லக மனிதன்......

அங்கிங்கெனுதபடி அகிலம் எங்குமே.....
அழுகைக் குரலை எழுப்பினுன் ஆண்டவனை நோக்கி...

பாடல் :

இதயத்தின் இருள் பாராய் இறைபரனே — உன்
உதயத்தின் அருள் தாராய் மறையவனே

உரை : பட்டமரமாய், பாழடைந்த ஓவியமாய், ஆழியில் துரும்பாய், ஆலையில் கரும்பாய் அழிகின்ருேம். வாழ்வு தர வேண்டும் இறைவா! வா! வா! வா!

பாடல் :

பவம் படரும் பாவ நிலத்தினிலே — பெரும்
தவம் சுடராய் எழும் மனத்தினிலே
செபம் முதலாம் ஞானப் பலத்தினிலே
அரும் மீட்பிருக்கோ அழுகை தானிருக்கோ

உரை : கருணைக்கடலே நீ வரவேண்டும். கதியற்ற எம்மை இருளில் இருந்து ஒளிக்கும் – பொய்யில் இருந்து மெய்க்கும் – தாழ்வில் இருந்து வாழ்விற்கும் இட்டுச் செல்ல வான் அகம் விட்டு பூமுகம் வாராய்! வாராய்.

பாடல் :

பரம் பொருள் தந்தை என்ற கருத்தும் என்ன – பூவில்
வருந்திடும் மக்களுக்கு மருந்தும் என்ன
பட்டது போது மென்று கெட்ட இப்பாரில் உன்னை
திட்டமதாய் அழைத்தும் வாராதிருப்பதேனே ....

உரை : பாவத்தின் வீக்கம் ஒருபக்கம். பாருலகின் ஏக்கம் மறுபக்கம். ஆண்டவன் கட்டளையை மீறிய ஆதித்தாய் தந்தைக்கு அலகையின் சாபம் மூலம் அவர் அளித்த கருணை மொழி—மீட்பின் வாக்குமொழி.

இறைவன் : ''பெண்ணுக்கும் உனக்கும் இன்று முதல் என்றும் பகை விதைத்தோம். அவளது கான்முளை உன் தலையை நசுக்கும்.'' என்ற உறுதிமொழி — மனுக்குலத்தின் மாறுபட்ட வரலாற்று ஓட்டத்தில் மறைந்துவிடாது தெளிவான விளக்கம் பெற்று—முன் அறிகுறிகளாலே துலக்கப்படுகிறது. அன்பே தெய்வம். அவ்வன்பு அன்பின் ஆழத்தை முன் அறிவிக்கின்றது. பழைய நியமனத்தில் ... ஆபிரகாம் என்ற ஆண்டவர் அடியவன். ஆபிரகாமின் அன்புக் குழந்தையான ஈசாக்கை — காட்சிக் களத்திற்கு அழைத்துச் சென்று அங்கு குன்றின்மீது பலியிடப் பணித்து விட்டார் பரமன்.

பாடல் :

உள்ளதெல்லாம் எனக்கு உன் அருளே — இறைவா உன்னை
தேடிடும் உளங்களுக்கு இன்பொருளே.
முத்தம் பொழி மகனை மரமணிந்து
சித்தம் தனை அறிந்து சிரம் பணிந்து—நித்த
பக்தியெல்லாம் பெருகிப் பலியிடவே — உந்தன்
சக்தி எனக்கீந்தருளே சற்குருவே இறைவா!

ஆபிரகாம் : இறைவா! என் கண்ணின் கருமணியை, காதல் திருமகனை பிள்ளைக் கனியமுதை, ஓரே ஒரு செல்வத்தை அண்ணலே, உன் ஆணையின் படியே. உன் மேற்கொண்ட அளவு கடந்த அன்பால் அரும்பலி தருகின்றேன். இறைவா! இறைவா! இறைவா!

இறை : நிறுத்து! ஆபிரகாம்! உன்பிள்ளைக்கு தீங்கு எதுவும் செய்யாதே, என்மேல் கொண்ட அன்பால், உன் காதல் மகனைப் பலியாக்கத் தயங்கவில்லை ... நீ.

பாட்டு :

பாசமென்றோர் குறிப் பலியிதுவே ...
பிள்ளையை ஏனோ பலியிடென்றார்
பின்னையும் தானே தடுத்து நின்றார்
மண்ணைப் படைத்தவர் அன்பு கொண்டே
தம் மகனையே பலியிடும் பாடமன்றோ
பாசமென்றோர் குறிப்பலியிதுவே

உரை : உள்ளத்தை உருக்கும் இந்த நிகழ்ச்சி, உந்நத தேவன் உலக மக்கள் மட்டில் கொண்டிருந்த உயர் அன்பின் சின்னமாகவும் — தன் ஒரே பேருன இறைத் திருக்குமரனை குவலயம் மீட்கக் குன்றிலே பலியிடப்போவதன் முற்குறியாகவும் விளங்கியது. அதை இயம்பும் இறைவாக்கினர் இசையாஸ்:

இசையாஸ் : "கன்னி ஒருத்தி கருத்தரித்து கனி ஒன்றைப் பெற்றெடுப்பாள். இருளில் உலவிய மக்கள் ஒளியைக் கண்டனர். மரணத்தின் நிழலில் வாழும் மக்களுக்குப் பகல் விடிந்தது. குழந்தை ஒருவன் நமக்காகப் பிறந்தான். மகவு ஒருவன் தரப் பெற்ருன். இதோ என் ஆண்டவர் யேசு! நமது பாவங்களுக்காக அவர் காயப்பட்டார். நமது அக்கிரமங்களுக்காக நொறுக்கப்பட்டார். அவரது காயத்தால் நாம் மீட்கப்பட்டோம். தம் விருப்பத்திற்கு ஒப்ப பலியானுர். பாவத்திற்காக அவருடைய உயிரைப் பிணையாய் வைத்தாராயினும் அவரது கால் வழி நிலைத்து வாழும்.

## காட்சி 1

உரை : பகலவனை ஆடையாய், பனிமதியை மிதியடியாய், பக்தியினைப் பாசத்துடிப்பாய்க் கொண்ட பலஸ்தீன நாட்டுப் பாவையாம் கன்னிமரியிடம் கனியானுர், கடவுளின் திருக்குமரன். அன்பே தெய்வம். அந்த அன்பு அவதாரம் எடுக்கிறது. மாபரன் மனித உருவம் தரிக்கும் மாபெரும் அன்பு ......

பாடல் :

பச்சிளம் குழந்தை தேவன்
பரம் பொருள் பாரில் வந்தான்
அச்சமே ஆற்ருக் குளிரின்
அடைபனி மூடும் குகையில்
துச்சமே துயரம் என்றே
தூங்கிடும் தூய பாலன்
மிச்சமாய் கந்தல் துணி சேர்
மிகை தரும் வைக்கோல் மெத்தை

உரை : அன்பைக் காணச் செல்லும் வஞ்சமில்லா நெஞ்சமுள்ள இடையர் ...

பாடல் :

மாபெரும் தேவன் இன்று
பாரில் உதித்தான் — கன்னி
கைதவழ் பொன் மகனுய்
பூவில் விழித்தார்
பாவ இருள் அகற்றும் பேர்
ஒளியாய் — இகழ்
பாவியின் கோல முண்டார்.
பாசமனதாய் — அன்பு ...

உரை : அறிவு திகழ் ஞானியர் அன்பு நிறை ஆண்டவனை அடி பணிகின்றனர். அன்பின் குமரனுக்கு – அகிலமே அஞ்சலி செலுத்துகின்றது.

இராகமாளிகைப் பாடல்

பாடல் :

கருணையின் தெய்வமே ஆராரோ— கதி
அருள் தரும் கனி அமுதே ஆரிரரோ
இறையோனே உந்தன் திருக்கோலம் — பவம்
நிறைபூவில் தவழும் அருட்பாலம்

(1)

பவ இருள் தனில் வீழ்ந்த மனிதகுலம் தனை
மீட்பதற்கே வந்த பரம் பொருள் நீ
முதற் பரம் பொருள் நீ ... ...

(2)

அலகையின் ஆட்சிக்கு முடிவாகும் — தெய்வ
அற்புதனே உந்தன் அவதாரம் — அன்பு அவதாரம்.

(3)

தீயவன் காவலன் ஏரோதன் — பழி
நீங்கிட மறைந்தது அயல் நாடு. எகிப்து அயல்நாடு.

உரை : கோபமுற்ற ஏரோது மன்னன் – தெய்வக் குழந்தையைத் தொலைக்க சதி செய்ததை வான தூதன் மூலமறிந்த திருவளனர் பிள்ளையையும் தாயையும் இரவோடிரவாக அழைத்துக் கொண்டு எகிப்திற்குச் சென்றனர். ஏரோது இறக்கும்வரை அங்கேயே இருந்தார்.

(4)

ஈராறு வயதான திருப்பாலன் — அறிவூட்டிய
இல்லம் ஜெருசலேக் கோவில் —
இறைக்குலத் தவக்கோவில்

உரை : அவருக்குப் பன்னிரு வயது நடக்கிறபோது திருவிழாவின் வழக்கப்படி ஜெருசலேமுக்குத் தாய் தந்தையருடன் சென்ற சிறுவன் இயேசு, ஆலயத்திலேயே மூன்று நாட்கள் தங்கி, மறை வல்லுநர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார் அவர் அறிவுத் திறனைக் கண்டோர் அதிசயப்பட்டனர்.

(5)

மாதவத் தாய் தந்தை நசரேத்தில் நெற்றிவியர்வை
முத்தாய் உழைத்த மனுவேலன் - வாலிப
மனுவேலன்.

உரை : நசரேத்திற்கு வந்து தாய் தந்தையருக்குப் பணிந்திருந்தவர்— பகல் இரவென்று பாராது – பனி மழை என்று நோகாது-பாடு பட்டு உழைத்தார். வளர வளர ஞானத்திலும் வளர்ந்து கடவுளுக்கும் மனிதருக்கும் மென் மேலும் உகந்தவரானார்.

(6)

சாய்ந்தது பேயே உனதாட்சி என்று
சாற்றிய தூய அருளப்பன் பரம ஞான அருளப்பன்.

அருளப்பர் : மறைக்குல மக்களே, மனந்திரும்புங்கள். ஏனெனில் விண்ணரசு அண்மி விட்ட . மனம்திரும்புவதற்கு உங்களுக்கு நான் நீரால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன். நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார். அவர் என்னிலும் வல்லவர். அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கவும் நான் தகுதியற்றவன். அவர் பரிசுத்த ஆவியாலும் நெருப்பாலும் ஞானத் தீட்சை அளிப்பார்.

(இயேசு ஞானஸ்நானம் பெறல்)

அருள : நான் உம்மிடம் ஞானஸ்நானம் பெறவேண்டியிருக்க நீரா என்னிடம் வருவது?

இயேசு : இப்போதைக்கு விட்டுவிடும். ஏனெனில் இவ்வாறே நீதியை எல்லாம் நிறைவேற்றுவது நமக்குத் தகும்.

(7)

இவர் எனக்கு அன்புத் திருப்பாலன் எனும்
குரலொலி கேட்டது இனிதாக-வானம் இசைபாய

(8)

திருப்பரன் சென்றது வனவாசம்
அங்கு அலகையை வென்றது திரிகாலம்

உரை : நாற்பது நாட்கள் நாளும் பொழுதும் நோன்பிருந்து நலிந்து மெலிந்த நாயகன் கிறீஸ்துவைத் தபவனத்தில் சோதிக்கத் தலைப் பட்ட சாத்தான் தோல்வியே கண்டது.

(9)

அமலநிறை ஒளி அருள் ஊட்ட - நீர் அழைத்தது
பன்னிரு அருள் தாசர் - சீமோன் முதல் தாசன்.

உரை : தம்மோடு இருப்பதற்கும், நானிலமெங்கும் நற்செய்தியை முரசொலிக்கத் தாம் அனுப்புவதற்கும் தமது மீட்புப்பணியைத் தொடர்ந்து செய்யவும் பன்னிரு சீடர்களை அழைத்தார்.

(10)

இருள் ஒழிந்ததென
அருள் தவழ்ந்ததென
அமலன் வடிவே மொழியாக
நிலை இழந்தவரும் நெறி குலைந்தவரும்
உயரும் வண்ணம் மலைமீது
அன்பை உணர்ந்து உயிர் வாழ — நீ
மலர்ந்த வேதம் புது உயர் கீதம் - அன்பு தவழ் நாதம்
கருணையின் தெய்வமே காணீரே - கதி
அருள் தரும் கனி அமுதே கேளீரே.

உரை : அன்பே தெய்வம். அந்த அன்பு திருவாய் மலர்கின்றது.

யேசு : எளிய மனதுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுடையது. சாந்த குணமுள்ளோர் பேறுபெற்றோர் ஏனெனில் மண்ணுலகு அவர்களுக்கே உரிமையாகும். தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர். அவர்கள் இறைவனைக் காண்பார்கள். உன் அயலானுக்கு அன்பு செய். பகைவனை வெறு என்று சொல்லிபதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள், அப்பொழுது வானகத்திலுள்ள உங்கள் தந்தையின் மக்களாய் இருப்பீர்கள். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் கதிரவனை உதிக்கச் செய்கிறார். நீதியுள்ளோர் மேலும் நீதியற்றோர் மேலும் மழை பொழியச் செய்கிறார்.

பாடல் :

சத்தியத்தின் அருட்சாரம்
சகவாழ்வின் திருச்சாரம்
நித்தியத்தின் பொருட்சாரம்
நிதம் அன்புக் குணச்சாரம்

இயேசு : என்ன உண்போம்! என்ன குடிப்போம் என்று நீங்கள் தேட வேண்டாம். அதைப்பற்றி ஏக்கமும் வேண்டாம். ஏனெனில் வயலில் இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் புல்லைப் பரலோக தந்தை இவ்வாறு அழகாக உடுத்துவாரானுல் உங்களுக்கு என்னதான் செய்யமாட்டார்.

பரி (1+2) : பக்திமானும்! பாவிகளை வரவேற்கின்ருன். நல்ல மனிதனும். நடத்தை கெட்டவர்களை நாடிப்போகின்ருன். விபரீதம்.

உரை : அன்பே தெய்வம். அவ்வன்பு பாவியின் வருகைக்காய் பாசமுடன் காத்திருக்கும் அன்பு.

இயேசு : மனம் திரும்பத் தேவையில்லாத தொண்ணூற்றென்பது நீதிமான்களைக் குறித்து வானகத்தில் உண்டாகும் மகிழ்சியைவிட மனம் திரும்பும் ஒரு பாவியைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும். ஒருவனுக்கு இரண்டு மக்கள் இருந்தார்கள். இளையவன் தந்தையை நோக்கி ''அப்பா சொத்தில் எனக்கு வர வேண்டிய பங்கைக் கொடும்'' என்ருன். அவரும் தன் சொத்தைப் பகிர்ந்து கொடுத்தார். எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு தொலை நாட்டிற்குப் பயணமானுன்.

பாடல் :

வா மகனே செல்வமே — வந்து
தா நிதமே இன்பத்தாலுளமே — குளிர

நிலை கெடும் மது மாதுன் விதியானதோ
வலை இடு சகவாசம் சதியானதோ
வறுமையில் உனதாட்டம் முடிவானதோ
உளமே வாடி ஓர் தினமும் உறங்காது
உள்ளபாசம் குறையாத தந்தை வீடு

பன்றிகள் வீங்கவோ
குன்றிலே ஏங்கவோ
ஒன்றுமே இல்லாமல்
பட்டினியும் தாங்கவோ

மைந்தனே நொந்தாலும்
தந்தையோ பிந்தாது
பரமபாவி மனம் மாறி அடி விழவும்
வாரி நீ எனது பிள்ளை
என்று கனிவுடன்....

வாமகனே செல்வமே — வந்து
தாநிதமே இன்பத்தாலுளமே குளிர

இயேசு : மனம் திரும்பி வந்த மைந்தனை அரவணைத்த தந்தை விருந்திட்டார். இறந்து போயிருந்த என் மகன் மீண்டும் உயிர் பெற்றான்; காணாமற் போயிருந்தவன் கண்டு பிடிக்கப்பட்டான் என்றார் அத் தந்தை...

ஒருவன் : ஆண்டவரே! தாவீதின் மகனே என்மீது இரங்கும். என் மீது இரங்கும்.

உரை : அன்பே தெய்வம். அவ்வன்பு சென்ற இடமெல்லாம் நன்மை செய்யும் தாராள அன்பு.

பாட்டு :

அருள் பாயுதே தேவா
என் உளம் அருள் பாயுதே—
உன் ஆனந்த மேவிய
தேவ பாசமிதில்... அருள் பாயுதே—

கண் தெரியாத ஆ புண்ணுடலோன் எந்தன்
வேதனைக்கு முடிவாகவே திரு விநோதமான
குணம் ஈந்தவா

புலம்பி அழுது கொண்டு
திரள் போல் வருகுதே
விம்மி நோகும் பெண்ணொரு
உருவம் உருகுதே
எரிந்த இச்சோக வாழ்வு ஆ...
கண்ணில் படுகுதோ
அன்பு சொரிந்து உளத்தளமே
தொடுகுதோ

சலித்த சனத்தை நிறுத்தி அவர்க்கு
நிறைந்த வியப்பு அளித்தவா
உயிர் தணிந்த பிணத்தை
அணைத்து மகர்க்கு
உணர்ச்சி கொடுத்து உயிர்த்தவா
நிலை உடல் சிலையதை
கடவுளின் குரல் படு
மலை இருள் சாவைக் கலைத்தவா
பரம் அருள் புதுமை என்றழைக்கவா
இனிய தாயுடனே அனுப்பவோ
இது அரிதே இது பெரிதே
தெய்வன்பு தானே
அன்பூறிடும் அருவி அமலநாதன் அருள்
அசைந்தாடு முளமோகன அருள்
உணர்வோடு......... ....
அருள் பாயுதே தேவா .......

உரை : அன்பே தெய்வம் அவ்வன்பு மனித பெலவீனத்தை உணரும் மகத்தான அன்பு.

பரி : போதகரே! பாரும்! இந்தப் பெண் யார் எனத் தெரிகிறதா?

சது : கட்டழகி ! இதழ் மொட்டழகி, கார் குழலழகி, கெட்ட நடை அழகி

பரி 3 : சீ..... விபசாரி ... விபசாரி

பரி : குருவே! இப்பெண் விபசாரத்தில் கையும் மெய்யுமாக மாட்டிக் கொண்டாள்.

சது : இத்தகைய இழிகுலத்துப் பேதைகளை கொல்ல வேண்டும். அதுவும் கல்லால் எறிந்துதான் கொல்ல வேண்டும் என்று பணிக்கின்றது மோயீசன் நமக்குக் கொடுத்த சட்டம்.

சது : இதையிட்டு உமது கருத்து என்ன?

இயேசு : உங்களில் பாவம் இல்லாதவன் முதலில் இவள் மேல் கல் எறியட்டும்.

(நிலத்தில் எழுதுகிருர்)

இயேசு : மாதே! உன்மேல் குற்றம் சுமத்திய சட்ட வல்லுநர் எங்கே ! உன்னை யாருமே தீர்ப்பிடவில்லையா?

பெண் : எவருமே தீர்ப்பிடவில்லை ஆண்டவரே!

இயேசு : நானும் உன்னைத் தீர்ப்பிட மாட்டேன். சமாதானமாகப் போய்வா மகளே. இனிமேல் பாவம் செய்யாதே!

பாட்டு :

அன்புயர் குருநாதா இன் புறு திருவேதா
மன் புவி உயிர் வாழ்வே — இறைவா
தந்தருள் வழி ஆளவே
பன்னரும் தெளிவாய் வான அன்பினை நாம் காணவே
வந்தெமை அருள் செய்வாய் சிந்தை களி கூரவே

உரை : அன்பே தெய்வம். அவ்வன்பையே உணர முடியா அகங்காரிகளான யூத மதத்தலைவர்கள்— சட்ட வல்லுநர்களின் சதி.

## காட்சி 2

# சதி சதுராடும் சற்குண அன்பு

பரி 1 நாங்களும் எத்தனை எத்தனை வழிகளை வகுத்தோம். புத்திக்குப் புரியாத மொழிகளையும், பழிகளையும் புதைத்தோம். கண்ட பலன், பாவமும் பழியும் எம்மையே சூழ்ந்து வருகிறது. சட்டத்தை நீட்டினோம். திட்டத்தைத் தீட்டினோம். எல்லாம் மட்டமாகின. நாங்கள் தான் கெட்டவர்கள்போலாகிவிட்டோம். உலகம் முழுவதும் அவனைப் பின் செல்கின்றது. எங்களைப் பைத்தியக் காரர் ஆக்கி விட்டது.

பரி 2 பைத்தியக்காரர் என்று மட்டும் இந்தப் பாழும் உலகம் கருதி விட்டால் ஒரு போங்கு. ஆனால், அவன் உயிரோடு இருப்பதன் மூலம் நாங்கள் உண்மையாகவே பைத்தியக்காரர் ஆகிவிடுவோம் என்பதுதான் எனது முடிவான கருத்து.

தலைவன் : ஏ! பார்த்தீர்களா? பாருங்கள். ஏறெடுத்துப் பாருங்கள். போர் தொடுத்தவன் போகும் போக்கைப் பாருங்கள்.

கைப்பாஸ் : கடைசிக் கட்டம், கழுத்திலே கயிறு சுருங்குகின்றது. விதியும் வீணனுடன் விளையாடுகின்றது. வினையும் வேகமுடன் சதுராடுகின்றது.

**தலைவன் :** புழுதி கிளம்புகின்றது. புத்தி குழம்புகின்றது. போர் முரசு கொட்டுகின்றது. இன்னும் நாம் மூடர்களாக இருந்தால் யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்பதை உணராது இருப்போம்.

**சது :** செல்வாக்கு உயருகின்றது. செருக்கு வளர்கின்றது. எம் சிந்தையும் வெந்து போகிறது.

**தலைவன் :** வெந்து போகின்றது. நல்ல வேடிக்கை. வேங்கை ஒன்று பாய்கின்றது. அதை வெள்ளாடாகக் கணித்து விட்டோம். எமதேவன் எழுந்துவர அவனை எலிபோல எண்ணி விட்டோம். சிங்கம் சினந்து எழ அதைச் சிற்றெறும்பாய்க் கருதி விட்டோம்.

**அன்றூஸ் :** எல்லாம் அவன் செயல் என்பதும் .....

**தலைவன் :** தவறு தட்டிக்கேட்க தைரியம் இல்லை என்று கூறுங்கள்

**கைப்பாஸ் :** ஸ்... ஸ்.. அதோ பாருங்கள்.

(கிறீஸ்து வெற்றிப்பவனி வரல்)

**தலைவன் :** என்ன சபையோரே? என்ன? இன்னுமா தீரவில்லை உங்கள் கலக்கம். ஹ.. இன்று தூக்குமேடையில் நிறுத்தப் பட்டிருப்பது நமது அரசியல் உரிமை அல்ல, நம் ஆண்டவன் ஆணையல்ல - எமது வளம் நிறைந்த பழமை. பத்து நூற்றாண் டைக் கண்ட பண்பாடு. பரமன் பரிந்தளித்த பக்தியின் மதம். இவைகள் வாழவேண்டுமா? வளம் பெற்று வானளாவ வளர வேண்டுமா? இன்றேல் நற்செய்தி என்ற நச்சுப்போர்வையில், அதிகாரம் என்ற அழுக்குப்பாதையில் அருள் அன்பு என்ற அழிவுப் போதையில் நம் சரித்திரத்திற்குச் சாவுமணி அடித்துச் சமாதி கட்டும் இந்த சந்தர்ப்பவாதியை தொலைத்து விடுவதா?

**பரி. 1 :** வேத பாரகரும் பரிசேயரும் சொல்லுகிற யாவையும் செய் யுங்கள். அவர்கள் செய்வதை மட்டும் பின்பற்ற வேண்டாம்- என்கிறான். கள்ள ஞானிகளே உங்களுக்கு ஐயோ கேடு என்று உரக்கக் கத்துகிறான். குருட்டு வழிகாட்டிகளே, உங்களுக்கு சாபம் என்று சபிக்கிறான். மதியிழந்து கதியற்று வாழும் கரடிக் கூட்டமே, குழப்பமும் கூத்தும் செய்து குலத்தை குழிதோண்டிப் புதைக்கும் குருட்டுச் சந்ததியே, பாவத்திலே பண்பிழந்து, பக்தி இழந்து, பரகதி இழந்து பரமன் கருணையிழந்து பரிதவிக்கும் பாம்புக்குட்டிகளே! நரகத்தீர்வை உங்களுக்கு நாலுபக்கத் தாலும் நல்வரவேற்பு விடுக்கின்றது — என்று நாக்கூச்சமின்றிக் கூறுகின்றானே!

சது. : இதை மறுக்க, இதை மறைக்க இந்தச்சபை அதாவது மக்களின் தலைவர்களைக் கொண்டுள்ள சபை எடுக்கப்போகும் திட்டம் என்ன ? விடுக்கப்போகும் தீர்ப்பு என்ன ? என்பதுதான் கேள்விக்குறி. தனிப்பெரும் தலைவர்களே, ஏன் இந்த மௌனம்?

பரி. 2 : சட்டத்தை உருவாக்கியது நாமல்ல, நீதியை அமைத்ததும் நாமல்ல, வாழும் விதத்தைக் காட்டிக் கொடுத்ததும் நாமல்ல

தலை. : மோசேஸ்! கடவுளால் தெரிந்து மக்கள் வழி காட்டியாக அமைந்தவர் எழுதிவைத்ததை நாம் விளக்கிக் காட்டுகின்றோம். அவர் கூறியபடி வாழுங்கள் என்று மக்களுக்கு அறிவூட்டுகின்றோம். ஆனால் இவன், நேற்றைக்கு முந்திய நாள் தோன்றிய முட்டாள்— அந்தப் பதவிப்பீடத்திலிருந்து மோசேசையே பொறிக்கத்தயாராகி இருக்கிறானென்றால் ... ...

சது. : கருமம் முழுக்க முழுக்க முற்றிவிட்டது என்றுதான் பொருள். முன்பு கூறப்பட்டது; இப்படி ஆனால்; நான் கூறுகின்றேன் இப்படி என்று அதிகார ஆணவத்துடன் போதிக்கின்றான். . நான் என்று நாக்குப் பிரளாமல் குளறும் இந்த நயவஞ்சகன் யார் ? எங்கிருந்து வந்தான். ஆ !

பரி. 1 : ஆ ! கேட்கவேண்டிய கேள்வி, மெசியாஸ் என்று தன்னைக் கூறிக்கொள்கிறான். இவன் யாருமே அறியாத நசரேத்தூரில் உதித்தவன், நன்னெறியில் வழிகாட்டும் நானிலத் தலைவனாக இருக்க வேண்டுமாம். பேரே தெரியாத பெண் ஒருத்திக்கு மகனாகப் பிறந்தவன், பெரியவர் பட்டியலில் தன் பெயரை வரைந்து விடுகிறான். பண்பு என்றால் எதுவெனத் தெரியாத பட்டிக்காட்டிலே பிறந்தவன் பாருக்கு வழிகாட்டப் போகிறானும் வழிகாட்ட. (சிரிப்பு) இவனுக்கு உணவும் உடையும் அளித்து வந்தானே இவன் தந்தை... ஒரு தச்சன் இப்படியான ஏழ்மையிலே, தாழ்மையிலே, வறுமையிலே, சிறுமையிலே பிறந்தவன் தானா மெசியாஸ்—கிறீஸ்து—இரட்சகர் (சிரிப்பு) ஹ ... .. சொல்பவனுக்கு மதி இல்லாது விட்டாலும் கேட்பவனுக்கும் மதி இல்லையா ? என்ன?

கைப்பாஸ் : நீங்கள் கூறுவதில் உண்மை இருப்பதை உணர்வோம். இவன் ஒரு புரட்சிக்காரன். மதத்திலே புரட்சி, அரசியலிலே புரட்சி, ஆகையால் மக்களிடையேயும் புரட்சி உண்டாகப் போகின்றது. சட்டம் விதிப்பது ஒன்று. அவன் போதிப்பது இன்னொன்று. விபசாரத்தில் யாராவது கையும் மெய்யுமாகப் பிடிபட்டால் அவளைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும்,

**பரி 1 :** என்பது தானே சட்டம்.

**அன்ருஸ் :** உங்களுக்குள்ளே குற்றம் செய்யாதவன் முதல் முதல் அவள் மேல் கல்லை எறியட்டும் என்று ஒருமுறை விபசாரி ஒருத்தியைச் சூழ்ந்திருந்த கூட்டத்தைப் பார்த்துக் கூறினுன். அவள் தப்பினுள்.

**பரி 2 :** சட்டத்தை அவமதித்த துட்டனை

**தலை :** சும்மா விடுவது அபாயம்

**கை :** ஓய்வு நாளைத் தூய்மைப்படுத்த அன்று எதுவுமே செய்யாமல் இருக்க வேண்டும் என்கிறது சட்டம். அப்படியான ஓய்வு நாளை அவன் எத்தனை முறை மாசு படுத்தியிருப்பான். புத்திக்குப் புரியாத புதுமைகளைச் செய்திருப்பான். விநோதப் பிரியர்களுக்கு விதம் விதமான வித்தை காட்டியிருப்பான்.

**அன்ருஸ் :** ஒருநாள் பிணியால் பீடித்திருந்தவனைக் குணமாக்கினுன். அன்று ஓய்வு நாளென்று எடுத்துக் காட்டியபோது ஓய்வுநாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டதல்லாமல் மனிதன் ஓய்வு நாளுக்காகவல்ல. ஆனுல், மனுமகன் ஓய்வுநாளுக்கும் தலைவனுக இருக்கிருர் என்ருன்.

**பரி 3 :** அதனுடைய உள் அர்த்தம் சட்டத்திற்கு மேலானவன் தான் என்று சொல்லாமல் சொல்லிவிட்டான்.

**சது :** மோசேஸ் யாரோ எவரோ என்ற விநோதமான விபரீதமான—

**கைப் :** அது மாத்திரமல்ல. ஆபிரகாமிலும் தான் தான் உயர்ந்தவன் என்று பலதரம் கூறியிருக்கிருன்.

**தலை :** இது தேவ தூஷணம்.

**எல்லோரும் :** தூஷணம்! தூஷணம்.

**தலை :** கொடிதிலும் கொடிது. இந்தப் போக்கு

**அன்ருஸ் :** நீங்கள் ஆபிரகாமை உங்கள் தந்தை என்று கூறினீர்கள். ஆனுல் ஆபிரகாமுக்கு முதல் நானிருக்கிறேன் என்ருன்.

**பரி. 3 :** அவமானம்! அவமானம்! ஆபிரகாம்என்ற அன்புத்தந்தைக்கு அஞ்சலி செய்யமறுப்பவன் அவனியில் வாழ அருகதையற்றவன்.

**கைப் :** பாவங்களை மன்னிக்க தன்னுல் முடியுமென்று பறைசாற்றியிருக்கிருன்.

**பரி 1 :** அதாவது தான் ஒரே கடவுளுக்கு — ஒப்பற்ற கடவுளுக்குச் சமமானவன் என்று...

பரி 2: ஹ.. அபசாரம்! அபசாரம்! சட்டத்தைக் காக்க வேண்டிய வர்கள் இதற்கேற்ற திட்டங்களை ஏன் இது காலும் உருவாக்காதிருந்தார்கள்.

பரி 3; கடவுளின் பெயரைச் சொல்லிக் கள்ளம் பண்ணித்திரியும் கயவனுக்கு கண்டிப்பாகத் தண்டனை கொடுக்கவேண்டிய கருமத்தில்

கைப்: பொறுதி! பொறுதி! பொறுதியாகக் கருமத்தை அலசி ஆராய்வோம். அவனைச் சுற்றி முன்னுக்கும் பின்னுக்கும் ஏராளமானவர்கள் தாளம் போடுகிறார்கள். படியாதவர்கள் பாமரமக்கள் பாதகமறியாதவர்கள் அவன் பாதத்தையே பின் தொடர்ந்து பவனி செல்கின்றார்கள். இது கிளர்ச்சியின் அறிகுறி.

அன்னு: இதற்கு முன் இப்படிப் புரட்சி செய்தவர்கள் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கியவர்களின் கதி எங்களுடைய மனதில் இன்னும் உயிரோடு ஊசலாடுகின்றது.

கைப்: இந்தக் கிளர்ச்சியை நாம் கிள்ளி எறிய வேண்டும். அல்லது இவனை இப்படி விட்டு விட்டால் ரோமானியர்கள் வருவார்கள். எலும்பை ஒடிப்பார்கள். இரத்தத்தைக் குடிப்பார்கள். நாட்டை அழிப்பார்கள். மக்களை ஒழிப்பார்கள்.

அன்னு: அது கடந்தகாலச் சரித்திரம் சான்று பகரும் அழிக்க முடியாத உண்மை.

கைப்: உங்களுக்கு இது தெரிகிறதா? இந்த உண்மையை இட்டு எப்போதாவது சிந்தித்தீர்களா? அதாவது மக்கள் எல்லோரும் அழியாதபடிக்கு ஒருவன் இறப்பதுதான் பொது நன்மை. எமது ஊரை அழிவிலிருந்து காப்பது எம் கடமை.

தலை: அந்தக் கடமையின் பெயரால் கேட்கிறேன். கடவுள் தெரிந்தெடுத்த களங்கமற்ற குலத்தின் பெயரால் கேட்கிறேன். திருமறையாம் அறநெறியின் முறைமொழியின் பெயரால் கேட்கிறேன். தாய்த்திருநாட்டின் தகைமை சேர் தனிப் பெரும் பண்பின் பெயரால் கேட்கிறேன். அவன் இறக்க வேண்டும்.

பரி 1: அவனுக்கு அளிக்கவேண்டிய தண்டனை மரணம்.

பரி 2: அணு அணுவாக உயிரை அழிக்கும் மரணம்.

பரி 3: அர்ப்பர்களின் பரிசான மரணம்.

(வேலையாள் உள்ளே வருதல்)

வேலை: யாரோ ஒருவன் தங்களுடன் பேசுவதற்குக் காத்திருக்கிறான். முக்கியமான விஷயமொன்று கூறவேண்டுமாம்.

கைப் : பெயர்

வேலை : யூதாஸ்

கைப் : யூதாஸ், யூதாஸ் ... ... ... யாராக இருக்கமுடியும். ஓ! சரி உள்ளே வரச் சொல்

(யூதாஸ் உள்ளே வருதல்)

பரி 1 : யூதாஸ்!

பரி 2 : ஸ்காரியோத் !!

பரி 3 : யூதாஸ்க்கரியோத் !!!

சது : ஆம்! அவனேதான்

அன்னு : ஏசுவுடன் திரியும் பன்னிரண்டு மடையருள் ஒருவன்.

யூதாஸ் : நீங்கள் விளங்காது பேசுகின்றீர்கள். யேசுவை நான் உங்களுக்கு காட்டிக் கொடுத்தால் என்ன கொடுப்பீர்கள்?

கைப் : என்ன கூறினுய்?

(எல்லாரும் ஒருவரை ஒருவர் பார்த்தல்)

யூதாஸ் : இயேசுவைக் காட்டிக்கொடுப்பேன். கைக்கூலி என்ன என்றேன்.

கைப் : உண்மையாகவா? யூதாஸ் நீ ... ...

யூதாஸ் : கைக்கூலி என்ன என்றுதான்

கைப் : ஆ! கைக்கூலி ... ... கைக்கூலி (சிரித்தல்) இதோ உடனுக்குடனே தான், ஒன்று, ஐந்து, பத்து, இருபது, இல்லை. முப்பது வெள்ளி நாணயங்கள்!

யூதாஸ் ; ஆ! முப்பது— முப்பது .. முப்பது ...

கைப் : ஆமாம் .. முப்பது . யூதாஸ் உன் பெயரை வரலாற்றில் வரையப்போகின்றுய். நமது தாய்த்திருநாட்டிற்கும் தரம் மிக்க தலைவர்களுக்கும் தனிச்சேவை செய்யப்போகின்றுய்

பரி 3 : காட்டிக் கொடுப்பதென்றால் கூட்டம் இல்லாத வேளையில் நடக்க வேண்டும். அல்லது வேண்டாத விபரீதம் விளையும்

(எல்லாரும் தங்களுக்குள் கதைத்தல்)

அன்னுஸ் : கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தமாதிரி எல்லாம் எங்கள் எண்ணப்படி அனுகூலம் ஆகின்றன.

கைப் : இவ்வளவு சுலபமாகக் கை கூடும் என்று கனவு முதலாகக் கண்டிருக்கமாட்டோம், ம் ... ஆயத்தமாகட்டும் அணிகலங்கள் ஆயுதங்கள் — ஆவன யாவும் ... வெற்றி நமதே

## காட்சி 3

# மரண சாதனம் அளிக்கும் மாபெரும அன்பு!

உரை : (யூதாசைக் காட்டல்) அன்பை அழிக்க அரக்கர் கூட்டம் அட்டகாசம் புரிகிறது. ஒளியை மறைக்க இருள் அமர்க்களப் படுகிறது. இக்கிறீஸ்துநாதரை முடித்துக் கட்டிவிட யூதத் தலைவர்களும் சட்ட வல்லுநர்களும் சதித்திட்டமிட்டனர், குருத் துரோகி யூதாசின் உதவியுடன். காலம் அண்மி விட்டதைக் கிறீஸ்து உணர்ந்தார். வரலாறு தம்முன் தவம் கிடப்பதையும் அறிந்தார். உலகிற்கு தம் மரணசாதனத்தின் சில சிறந்த கொடைகளையும் கொடுக்க முன் வந்தார். இம்மையில் இருந்த தம்மவரை தெய்வ அன்பிலும் அன்பால் அளவற அன்பு செய் தார்.

(பாதம் கழுவுதல்)

பாடல் :

கால் கழுவும் சேவையினைக்
கடவுள் செய்கின்றார் — குரு
நாதன் இவர் வழியைச் சீடர்
நாடிப் பற்றவே

காதலினால் கடைசி இரவு
கலங்கி நின்றாரே — உடல்
சாதல் எனினும் பாடம் இதனைப்
பணித்துச் சென்றாரே !

முதல் இடமும் முழு உயர்வும்
மூட நம்பிக்கை — பிறர்
முகம் மலரப் பணி செய்வதே
மூர்த்தியின் கொள்கை
அன்பு என்ற அடிப்படைதான்
அகிலத்தை வெல்லும் — தூய
இன்பந் தந்து இருட்திரையை
என்றுமே கொல்லும்

**இயேசு :** நான் என்ன செய்தேன் என்பதை அறிவீர்கள். நீங்கள் என்னைக் குருவென்றும் ஆண்டவரென்றும் அழைக்கிறீர்கள். நீங்கள் அழைப்பது முறைதான். ஆனால் ஆண்டவராகிய நான் உங்களுடைய கால்களைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் ஒருவருடைய கால்களைக் கழுவவேண்டும். நான் எவ்விதம் செய்தேனோ அவ்விதமே நீங்களும் செய்ய வேண்டும். உங்கள் எல்லோரையும் எனக்கு நன்றாகத் தெரியும், ஆனால், ஆனால் என்னோடு சேர்ந்து அப்பம் உண்பவன் எனக்கு விரோதமாகத் தன் குதிக்காலைத் தூக்குவான் என்ற தேவவார்த்தை நிறைவேற வேண்டும். மெய்யாகவே, மெய்யாகவே நான் கூறுகின்றேன். உங்களில் ஒருவன்-உங்களுக்குள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்.

(பரபரப்பு—ஒருவர் ஒருவரைப் பார்த்தல்)

**இராயப்பர் :** ஆண்டவரே நானா ?

**யாகப்பர் :** நானோ ஆண்டவரே அந்தத் துரோகி?

**தோமை :** ஆண்டவரே ! நானோ உம்மைக் காட்டிக் கொடுப்பவன்?

**பிலிப்பு :** ஆண்டவரே நானோ அந்தப் பாவி !

(கடைசியாக யூதாஸ்)

**யூதாஸ் :** நானா ?

**இயேசு :** நீயே கூறி விட்டாய்.

(இராயப்பர் அருளப்பருக்கு சைக்கினை காட்டல்)

**அருளப்பர் :** ஆண்டவரே அவன் யார் ?...

**இயேசு :** நான் இந்த அப்பத்தை இரசத்தில் தோய்த்து யாருக்குக் கொடுக்கிறேனோ அவன் தான் என்னைக் காட்டிக் கொடுப்பவன். மனுமகன் தன்னைக் குறித்து எழுதப்பட்டபடியே போகிறார். ஆயினும், அவர் எந்த மனிதனால் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ அவனுக்கு ஐயோ கேடாம் ! அவன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலம்.

(ஸ்கரியோத்துக்கு அப்பம் கொடுத்தல்)

**இயேசு :** (யூதாசை நோக்கி) நீ செய்யப்போவதை விரைவாகச் செய்துமுடி.

(அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து)

இதைப் பெற்று உண்ணுங்கள் இது என் சரீரம்

(எல்லோருக்கும் கொடுத்தல்)

( பாத்திரத்தை எடுத்து தோத்திரம் செய்து )

இயேசு : இது என்னுடைய இரத்தம். இதை நீங்கள் அருந்துங்கள். ஏனெனில் இது பாவப் பொறுத்தலின் நிமித்தம் எல்லோருக்காகவும் சிந்தப்படும் முடிவற்ற புதிய உடன்படிக்கையின் இரத்தம்.

இயேசு : ''அன்புக் குழந்தைகளே, நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறேன் நான் உங்களுக்கு அன்பு செய்தது போல நீங்களும் ஒருவர்மீதொருவர் அன்பு கொண்டிருந்தால்தான் நீங்கள் என்னுடையவர்கள் என்பதை எல்லோரும் அறிந்துகொள்வார்கள். தந்தை என்மேல் அன்பு கூர்ந்ததுபோல நானும் உங்கள்மேல் அன்பு கூர்ந்தேன். என் அன்பில் நிலைத்திருங்கள். இன்னும் சொற்ப காலந்தான் உங்களுடன் தங்கியிருப்பேன். நீங்களும் என்னைத் தேடுவீர்கள். ஆனால் நான் போகிற இடத்துக்கு நீங்கள் போக முடியாது. எவ்விடம் போகிறேன் என்று அறிந்திருக்கிறீர்கள். வழியையும் அறிந்திருக்கிறீர்கள்.

தோமை : ஆண்டவரே நீர் எவ்விடம் போகிறீர் என்று தெரியாது. வழியையும் அறிய மாட்டோம்.

இயேசு : வழியும் உண்மையும், வாழ்வும் நானே. எவனும் என் மூலமாகத்தான் பிதாவினிடத்தில் சேரவேண்டும்.

பிலிப்பு : ஆண்டவரே, உம்முடைய பிதாவை—அவரை எங்களுக்குத் தயவு பண்ணிக் காட்டவேண்டும்.

இயேசு : இவ்வளவு காலமாக நான் உங்களுடன் இருக்கிறேன். இன்னமும் நீங்கள் என்னை அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் காண்கிறவன் என் தந்தையைக் காண்கிறான். நான் என் தந்தையிலும் தந்தை என்னிலும் இருப்பதாக நீங்கள் நம்புவதில்லையா? குறிக்கப்பட்ட நேரம் அண்மிவிட்டது. இன்றிரவு நீங்கள் எல்லோரும் என்னிமித்தம் இடறல் படுவீர்கள். ''மேய்ப்பனை அடிப்பேன். மந்தையின் ஆடுகள் சிதறுண்டு போகும்'' என்று எழுதியிருக்கின்றது.

இராயப்பர் : ஆண்டவரே உம்மைப்பற்றி மற்றவர்கள் இடறல்பட்டாலும் நான் ஒருபோதும் இடறல்படமாட்டேன்.

இயேசு : சீமோன், சீமோன் இன்றிரவு சேவல் கொக்கரிக்குமுன் மும்முறை நீ என்னை மறுதலிப்பாய். இது சத்தியம்.

இராயப்பர் : ஆண்டவரே உம்முடன் இறக்கவேண்டி வந்தாலும் நான் உம்மை மறுதலிக்கமாட்டேன்.

அப்போஸ்தலர் எல்லோரும் :

மறுதலிக்க மாட்டோம் ஆண்டவரே,
மறுதலிக்க மாட்டோம்

## காட்சி 4

# துன்பக் கடல் உழலும் தூயதவ அன்பு

**உரை :** கிறீஸ்துவும் அவருடையவர்களும் அன்பின் தந்தையை வேண்டுவதற்கு அமைதி சூழ்ந்த தைலமரச் சோலையை அண்டிப் போகிறார்கள்.

அங்கு—கவலைக்கு கரையுண்டா? கண்ணீருக்கு வரையுண்டா? வேதனைக்கு வடிவமுண்டா? சோதனைக்கு முடிவுதான் உண்டா? யேசுவைப் பொறுத்தமட்டில், உடல் நடுங்கி, உள்ளம் உருகி, உயிர் பதறி வியர்வை கொட்டுகிறது. உலகின் பாவ வாழ்வினால் பாவம் பயங்கர வடிவம் எடுத்துப் பரமன் முன் தோன்றுகின்றது. அன்பே தெய்வம் அவ்வன்பின் ஆருத்துயரம் இதோ...

**இயேசு :** என் ஆத்துமமானது மரணமட்டும் துயரத்தால் நிறைந்திருக்கிறது. நீங்கள் இங்கே தங்கியிருங்கள் .. என்னோடு விழித்திருங்கள் ... .. வேண்டுங்கள்.

( சற்று அப்பால் சென்று )

பிதாவே ! இயலுமாகில் இந்தப் பாத்திரம் என்னை விட்டு அகலட்டும். ஆனால் என்னுடைய மனதின் படியல்ல உம்முடைய விருப்பத்தின் படியே ஆகட்டும்.

( திரும்பி வந்து சீடர்களைப் பார்த்து )

**இயேசு :** என்ன? ஒருமணிநேரம் என்னுடன் விழித்திருக்க உங்களால் முடியவில்லை. சோதனைக்கு உட்படாதபடி விழித்திருங்கள். செபம் செய்யுங்கள். மனம் மிகவும் வேகம் உள்ளதுதான். ஆனால், உடல் பலம் குறைந்தது.

( திரும்பவும் வேண்டுதல் )

**இயேசு :** என்பிதாவே! இந்தப் பாத்திரம் என்னைவிட்டு அகலக்கடவது. இதை நான் உட்கொள்ளாமல் அகன்று போகாதாகில் உம்முடைய விருப்பத்தின் படியே நடக்கட்டும்.

(வானதூதன் தோன்றுதல்)

**பாடல் :**

தீதெல்லாம் அன்பு கொல்லும் — சிலுவை
அஞ்சேல் தீராது வெல்லும் இறைவா
இறைவா இறைவா இறைவா

இயேசு : பிதாவே! பிதாவே! என்பிதாவே! இந்தப் பாத்திரம் என்னை விட்டு அகலப் பண்ணியருளும். ஆனல் என்மனதின் படியல்ல உம்முடைய மனதின் படியே ஆகட்டும்.

( திரும்பி வந்து சீடர்களிடம் )

நீங்கள் இப்போது தூங்குங்கள். நன்ருக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் இதோ இந்த நேரம் மனுமகன் பாவிகளிடம் கையளிக்கப் படப் போகிருர். எழுந்திருங்கள் போவோம்! என்னைக் காட்டிக் கொடுப்பவன் நெருங்கி விட்டான்.

( அப்போது யூதாஸ் கிட்டவந்து )

யூதா : குருவே வாழ்க!

இயேசு : நண்பா! எதற்காக வந்தாய். யூதாஸ்! என்னை முத்தமிட்டா காட்டிக் கொடுக்கிருய்

( யேசு சனங்களை நோக்கி)

நீங்கள் யாரைத் தேடி வந்தீர்கள்

யூத தலைவன் : நசரேத்தூர் யேசுவைத் தேடிவந்தோம்

இயேசு : நான் தான்?

( எல்லோரும் பின்னிடுதல் )

இயேசு : யாரைத் தேடுகிறீர்கள்.

யூத தலைவன் : நசரேனுவாகிய யேசுவை

இயேசு : நான் தான் அவர் என்று கூறினேன். நீங்கள் என்னைத் தேடி வந்தால் மற்ற இவர்களைப் போக விடுங்கள்.

( யேசு பிடிபடல்—இராயப்பர் ஒருவன் காதை அறுத்தல் )

இயேசு : உன்னுடைய வாளை உறையில் போடு. வாளை எடுப்பவர்கள் வாளினுல் மடிவார்கள் என்னுடைய தந்தையிடம் கேட்டால் வானத்திலிருந்து பன்னிரண்டிற்கு அதிகமான படைகளை அனுப்ப மாட்டாரென்ரு கருதுகிருய். இல்லை! வேதநூலில் எழுதப்பட்டிருப்பது நிறைவேறவேண்டும்.

( குணப்படுத்தல் )

( இயேசு சனங்களை நோக்கி )

ஒரு கள்வனைப் பிடிக்க வருவதைப்போல் கத்திகளோடும் தடிகளோடும் வந்திருக்கிறீர்கள். அல்லும் பகலும் ஆலயத்தில் போதித்துக் கொண்டிருந்தேனே அப்போது ஏன் என்னைப்பிடிக்க வில்லை. ஆனுல், இதுவே உங்கள் நேரமும், இருளின் வல்லமையும்.

( யேசுவைப் பிடித்துக் கொண்டு போதல் )

( சத்தம் — அப்போஸ்தலர் சிதறல் )

## காட்சி 5

# சங்கப் பழி தாங்கும் தங்கமகன் அன்பு

உரை : இயேசுபிடிபட்டார். சுட்டப்பட்டார். கைப்பாஸ் என்ற தலைமைக் குருவிடம் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே யூத அறிஞரும் மூப்பரும் கூடியிருந்தார்கள் தலைமைக் குருக் களும் தலைமைச் சங்கத்தார் அனைவரும் இயேசுவைச் சாகவைக்க அவருக்கு எதிராகப் பொய்ச்சான்று தேடினர்.

யூதத்தலைவன் : யூதமக்களை இரட்சிக்க வந்த வேதநாதன் ! வைய கத்தை வாழ்விக்க வந்த வள்ளல் பெருமான். !

பரி. 1 : கிறீஸ்து.

பரி. 2 : மெசியா

சது. : இரட்சகர்

யூதத்தலைவன் : ஹ.. ஹ கடவுள் மக்களுக்கு கடமை செலுத்த வந்த கருணைக்கடல். இவன் ஓர் குற்றவாளி... மக்களின் சேவை யைக் கரும்பென்றும் கடவுளின் கட்டளையைத் துரும்பென்றும் எண்ணி ஓய்வுநாளை அலட்சியம் செய்திருக்கின்றான், இந்த அறிவிலி.

பரி. 3 : பேயின் துணை தேடுவது குற்றம். மந்திரங்களை ஓதி மக்களை வசப்படுத்தி மாய்வித்தை காட்டுவது குற்றம். மாறுபட்ட வேதத்தில் வேறு பட்டுச் செயலாற்றுவது மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம். இவன் இக்குற்றத்தை மறுக்கட்டும் பார்க் கலாம்.

யூதத்தலைவன் : இவன் எங்கள் சட்டங்களை அவமதித்தான். புரட்சி செய்வதற்குத் திட்டம் வகுத்து வந்தான். எங்களுடைய இராட் சியம், யூதர்களுடைய இராட்சியம், தாவீது அரசனுடைய தனிப்பெரும் இராட்சியம், இதோ வந்து விட்டதென்று போதித்தான். அதாவது உரோமை ஏகாதிபத்தியத்தை அடி யோடு அழித்து வேரோடு களைந்து எமது அரசியலையும் அரசாட் சியையும் நிலை நாட்டுவோம் என்பதுதான் அதன் உட்கருத்து.

ஒருவன் : எனது உடலை உங்களுக்கு உணவாகத் தருவேன் என்று கூறினான்.

சது. : கண்ணுக்குக் கண்ணும், பல்லுக்குப் பல்லும் அல்ல. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் கொடு.

ஒருவன் 1 : நீதி மன்றத்தில் சென்று வழக்காடாதே

மற்றவன் 2 : பாவிகளை அன்பு செய்யட்டுமாம், அன்பு!

ஒருவன் 1 : கோவிலைக்கொண்டு ஆணையிடாதே !

மற்றவன் 3 : நானே உங்களுக்கு வாழ்வு, வழி, ஒளி

ஒருவன் 1 : நான் பாவிகளைத் தேடி வந்தேன்.
பாசாங்குப் பேர்வழி

மற்றவன் 4 : ஆபிரகாம் உம்முடைய தந்தையல்ல!

ஒருவன் 1 : நீங்கள் சாத்தானின் மக்கள்!

பரி. 1 : சபையோரே ! சட்டம்! குற்றம், தண்டனை. சட்டம் இருக்கின்றது. குற்றம் நடக்கின்றது. தண்டனை கண்டிப்பாகக் கொடுக்கப்பட வேண்டும். இந்தக் குற்றவாளியைப் பாருங்கள். உற்றுப் பாருங்கள். ஆனல், உணர்ச்சி வசப்பட வேண்டாம். பாவம், பரிதாபம் என்று பெருமூச்சு எறிய வேண்டாம்.

சது. : முகம் வாடியிருக்கிறதா ? மூர்க்கத்தினுல் போலும். உடல் சோர்ந்திருக்கின்றதா ? உதவாக்கரை எண்ணங்களினுல் போலும். சோகந்தான் வடிவெடுத்து நிற்கின்றதா ?

பரி. 1 : எச்சரிக்கிறேன். இவன் ஓர் குற்றவாளி! துரோகி ! கடவுளுடைய ஆலயத்தில் கயிறு எடுத்துக் கண்டித்துக் கலைத்து அடித்தானே பக்தர்களை. விரியன் பாம்புக் குட்டிகளே! வெள்ளையடித்த கல்லறைகளே ! வேதம் அறியா மேதைகளான போதகஞானிகளே ! என்று வீம்பு பேசினனே ! குருக்களுக்கும் மக்களுக்கும் பிணக்கையும் பிளவையும் பின்னிப் பிரிக்க முயன்றுனே. இப்போது வாயடைத்து நிற்கின்றுன்.

பரி. 2 : வாயடைத்து நிற்கின்றுன் வாய்ப்புக்கிடைத்த பொழுதும் இவனுடைய உள்ளமும் உடலும் குற்றத்தின் பிடியினுல் சுற்றப் பட்டு இருக்கின்றன. கொலை செய்யவில்லை.

யூததலைவன் : உண்மை

பரி 2 : கொள்ளையடிக்கவில்லை.

யூததலைவன் : உண்மை

பரி 2 : ஆனல் கொலைக்கும் கொள்ளைக்கும் வித்திட்டான். தனக்குக் கிறிஸ்து மெசியா இரட்சகர் என்ற போர்வை போர்த்தி. நான்தான் கிறிஸ்து என்று ஒரு போதும் நேரடியாகக் கூருமல் இருந்திருக்கலாம். அப்படி நான் ஒரு போதும் கேட்கவில்லை

பரி 3 : நீர் கேட்காது இருந்திருக்கலாம். நான் கேட்டிருக்கிறேன். இன்னும் என்னைப்போல் எத்தனையோ பேர் இங்கு கூடியுள்

ளவர்கள் கேட்டிருக்கிறார்கள். இவன் கிறீஸ்து என்று வெளிய ரங்கமாகக் கூறியிருக்காவிட்டால் இத்தனை கோடி மக்களும் அவனை நாடி! அவன் சொற்படி ஆடி, வாழ்த்துப்பாக்கள் பாடி வலம் வந்து கொண்டிருப்பார்களா? இவன் தான் மெசியா என்று வெட்ட வெளிச்சமாகக் கூறியிருக்கிறான்.

பரி 1 : இப்போது தர்க்கிக்க நேரமில்லை. இது கருத்தரங்கு அல்ல. செயலரங்கு. இவனுக்கு எதிராக என்னிடத்தில் ஒரு பாரதூர மான குற்றச்சாட்டு உண்டு. இவன் கூறினான் ஒருமுறை 'இந்த ஆலயத்தை இடித்துச் சுக்கு நூறாக்கி...

பரி 2 : மறுபடியும் அதைக் கட்டிமுடிக்கும் சக்தி என்னிடத்தில் உண்டு என்று.'

கைப்பாஸ் : என்ன கூறினான்

பரி 1+2 : ஆலயத்தை இடித்துத் தகர்த்து மூன்று நாட்களில் எழுப்புவேன் என்று ...

சது : ஆம்! ஆம்!

யூத தலைவன் : ஆம்! அந்த அலங்காரமான வார்த்தையால் ஆண்டவனை அவமதித்திருக்கிறான் அயோக்கியன்.

எல்லோரும் : ஆம்! ஆம்!

கைப்பாஸ் : உனக்கு எதிராக எத்தனையோ பேர் எவ்வளவோ விதமாக குற்றம் சாட்டி இருக்கிறார்கள். நீபோதித்தது தவறு என்று சாட்சி கூறுகிறார்கள். இவ்விதமான குற்றச் சாட்டுகளுக்கு எல்லாம் நீ என்ன பதில் அளிக்கிறாய். நீ செய்தது, கூறியது எல்லாம் குற்றமென்று ஒத்துக் கொள்கிறாயா?

இயேசு : "நான் உங்களிடம் கூறினால் என்னை நம்பமாட்டீர்கள். நான் உங்களிடம் கேட்டால் மறுமொழி கூறவும் மாட்டீர்கள். என்னை விடுதலையாக்கவும் மாட்டீர்கள். ஏன், நான் ஒழித்து மறைத்து உலகத்துக்குப் பேசவில்லை. வெளியரங்கமாய்ப் பேசினேன். செப ஆலயத்தில் போதித்தேன். நீங்கள் எல்லோரும் கூடித் தர்க்கிக்கும் இடத்தில் போதித்தேன். அந்தரங்கமாய்ப் பேசியதில்லை; நான் போதிக்க கேட்டவர்களுக்கு நான் என்ன கூறினேன், என்று தெரியும். என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்"

யூத தலைவன் : (அறைதல்) தலைமைக்குருவுக்கு இப்படியா நீ தட்டிப் பதில் சொல்வது.

யேசு : நான் தவறாகப் பேசியிருந்தால் தவறு எது என்று எடுத்துக் காட்டு. பேசியது உண்மையானால் நீ எதற்காக கன்னத்தில் அறைந்தாய்?

**கைப்பாஸ் :** உண்மை! கேள்வி ஒன்று! பதில் இன்னும் ஒன்று! குற்றம் ஒருவிதம்! விடை வேறொருவிதம் . நீ குற்றவாளியா? என்பது தான் கேள்வி! நீ கிறீஸ்துவா என்பதுதான் கேள்வி. கூறு. கூசாமல் கூறு நீ மெசியாவா? கூரை மீதிருந்து கொக்கரித் தாயே. இப்போது பேசாதிருக்கின்றாய் ஞானிபோல. சுற்றவன் போல் நடித்துநிற்கும் குற்றவாளியே! அமைதியை அழுந்திப் பிடித்திருக்கும் அகங்காரியே, அழிவையும் இழிவையும் பழியுடன் சுமந்து வந்த பாதகப் போதகனே! கடைசி முறையாகக் கேட்கிறேன்! என்றும் வாழ்வுள்ள கடவுள் பெயரால் கேட் கிறேன். சுர்த்தாதி கர்த்தரின் கனம் மிகுந்த ஆணையால் கேட்கிறேன். நீ கடவுள் மகனாகிய கிறீஸ்துவா? ..

**யேசு :** நீரே கூறி விட்டீர். அல்லாமலும் மனுமகன் வல்லமை பொலிந்த இறைவனது வலது பக்கத்தில் வீற்றிருப்பதையும் வானமேகங்களின் மேல் வல்லமைப் புகழுடன் வருவதையும் வெகு விரைவில் காண்பீர்கள். இது சத்தியம்

(பெரிய குரு சட்டையைக் கிழித்துக் கொண்டு)

**கைப்பாஸ் :** ஆ! இவன் தேவதூஷணம் சொல்லிவிட்டான். இன் னும் நமக்குச் சாட்சிகள் ஏன் வேண்டும். இவன் கூறிய தேவ தூஷணத்தை நீங்கள் கேட்டீர்களே, எமது குலத்தை அழிக்க வந்த இந்தக் கொலைபாதகன் வல்லப கடவுளுக்கு எதிராகத் பல்லவி பாடி விட்டான். இப்புனித இடத்தை புண்பட்ட இட மாக மாற்றி விட்டான். ஒழித்து மறைத்து அல்ல, பகிரங்கமாகத் தனது சுய உருவத்தை வெளிக்காட்டி விட்டான். நீங்கள் என்ன கருதுகிறீர்கள்.

**யூததலைவன் :** இவன் இறந்தாக வேண்டும்.

**எல்லோரும் :** இவன் இறந்தாக வேண்டும்

(ஒரு மூலையில்)

**ஒருவன் :** நீயும் கலிலேயனாகிய இயேசுவுடன் இருந்தாய்

**இராயப்பர் :** நீ சொல்வது ஒன்றுமே எனக்கு விளங்கவில்லை

**ஒருவன் :** உன்னுடைய பேச்சே உன்னை வெளிப்படுத்துகின்றது

**இராயப்பர் :** சத்தியமாக நான் ஒன்றுமே அறிய மாட்டேன்

**ஒருவன் :** இல்லை நீ ஏமாற்றுகிறாய்

**இராயப்பர் :** சத்தியமாக, சத்தியமாக எனக்கு அவரைத்தெரியாது

(சேவல் கொக்கரிக்கின்றது)

**கைப். :** அது தான் தகுந்த தண்டனை! மரணம்!!

**உரை :** அன்பினை அழித்துக்கட்ட அதிபதி பிலாத்துவிடம் அழைத் துச் செல்கின்றனர். அதிகார வெறியினர்.

## காட்சி 6

# நீதிபதி தீர்வையிடும் நீக்கமறு அன்பு

பிலாத்து : இது என்ன?

தலைவன் : நீதிகோரி வந்த மேதைகளின் திரள்.

பிலாத்து : நீதிகோரும் அளவிற்கு நிகழ்ந்தது?

தலைவன் : நிகழக் கூடாத குற்றம்.

பிலாத்து : அதைப் புரிந்தது ?

கைப்பாஸ் : இவன்.

பிலாத்து : இவன்?

தலைவன் : ஓர் குற்றவாளி !

பிலாத்து : குற்றவாளி! குற்றவாளி! இவனுக்கு எதிராக என்ன குற்றத்தைச் சாட்டுகிறீர்கள் ?

தலைவன் : இவன் குற்றவாளி அல்ல என்றால் இவனை உம்மிடம் கொண்டு வந்திருக்க மாட்டோமே ?

யூதர் : உம்மிடம் இவனைக் கொண்டு வந்திருக்க மாட்டோம் !

பிலாத்து : அப்படி என்றால் அவனை நீங்களே கூட்டிச் செல்லுங்கள். உங்களுக்கு வேத சட்டம் உண்டு. அதன்படி இவனுக்கு தீர்ப்பு அளியுங்கள்.

கைப்பாஸ் : எவனுக்கும் மரணத்தீர்ப்பு அளிக்க எமக்கு அதிகாரமில்லை

பிலாத்து : மரணத்தீர்ப்பு ! அது எதற்காக ...?

பரி. 1 : இவன் எமது மக்களிடையே புரட்சியை ஏற்படுத்தி வருகிறான். குழப்பத்திற்கு தலைமை தாங்குகின்றான். எமது அரசனுகிய செசாருக்கு வரிசெலுத்த வேண்டாமென்று மக்களைத் தூண்டுகிறான்.

பரி. 2 : தான் தான் கிறீஸ்துவாகிய அரசன் என்று பறைசாற்றுகிறான்

தலைவன் : ஆ ! ஆ! கிறீஸ்துவாகிய அரசன் (சிரிப்பு)

(பிலாத்து இயேசு விடம் வந்து)

பிலாத்து : நீ யார் ? யூதர்களுடைய அரசன் தானா ?

இயேசு : இதை நீராகக் கூறுகின்றீரா ? அல்லது இப்படி மற்றவர்கள் என்னைக் குறித்து உம்மிடம் சொல்லி இருக்கின்றார்களா ?

**பிலாத்து :** நான் யூதனா, என்ன ? உன்னுடைய மக்களும் குருக்களும் உன்னை என்னுடைய நியாயத்தீர்ப்புக்கு கையளித்தார்கள். நீ என்ன செய்தாய்?

**இயேசு :** எனது அரசு இவ்வுலகத்துக்கு உரிமையானதல்ல. அப்படி இருந்திருப்பின் என் காவலர்கள் யூதர்களுக்கு எதிராகப் போர் செய்திருப்பார்கள். எனது இராட்சியம் இவ்வுலகத்துக்கு உரியதல்ல.

**பிலாத்து :** ஆ! அப்படியென்றால் நீ உண்மையாக ஓர் அரசன் ?

**இயேசு :** நீரே கூறிவிட்டீர் நான் அரசன் என்று. உண்மைக்கு உறுதி கொடுக்க உலகில் உதித்தேன். உண்மையை நாடி வாழும் எவனும் என் குரலைக் கேட்கிறான்.

**பிலாத்து :** உண்மையென்றால் ? (வெளியில் சென்று)
நான் அவனிடத்தில் எதுவித குற்றத்தையும் காணவில்லை

**கைப்பாஸ் :** (சத்தத்துடன்) இவன் ஒரு கலகக்காரன். கலிலேயா நாடு தொடங்கி இங்கு மட்டும் யூதேயா தேசமெங்கும் போதித்துக் கொண்டு வந்தான். மக்களைப் புரட்சிக்கு தூண்டி விட்டிருக்கிறான்.

**தலைவன் :** புரட்சிக்காரன் ! கலகக்காரன் !!

**யூதர் :** புரட்சிக்காரன் ! கலகக்காரன் !!

**பிலாத்து :** இவன் கலகக்காரன் என்றுதான் என்னிடத்தில் ஒப்புவித்தீர்கள். ஆனால் உங்கள் முன்பாக இவனை விசாரணை செய்தும் நீங்கள் சாட்டும் குற்றங்கள் எதையும் காணவில்லை. மரண தண்டனை பெறுவதற்கு ஏதுவான எதுவும் செய்யவில்லை. ஆதலால் இவனைத் தண்டித்து சாட்டையால் அடித்து விடுதலை செய்கிறேன்.

**தலைவன் :** இல்லைக் கொல்லவேண்டும். ! கொல்ல வேண்டும். !!

**எல்லோரும் :** கொல்ல வேண்டும் ! கொல்லவேண்டும் !!

( கசையடி )

**உரை :** என்ன கொடுமை! ஏன் இந்தக் கோலம்! எதற்காக இந்த வேதனை ! ஈயக் குண்டுகள் கட்டியுள்ள வார்களால் அடிக்கிறார்களே. இதோ அடி விழும் ஒலியைக் கேள். துடிக்கும் துடியைப் பார். கன்றும் உடல், கசியும் இரத்தம், கிழியும் சதை, பெருகும் காயம். பாயும் குருதி அம்மம்மா! .. உடலைக் கசையால் வாட்டும் வேளையில் கடும் சொற்களையும் இழி மொழிகளையும், பழிவசைகளையும் பொழிகின்றார்கள் இந்தச் சேவகர்கள்.

( முண்முடி சூட்டுதல் )

உரை : அரசன் என்று கூறிய அன்புக் கடவுளுக்கு என்ன அவமானம் செய்கிறார்கள். முடி சூட்டுகின்றார்கள். மணிமுடியா? இல்லை இல்லை, முண்முடி. அதைச் சிரசில் அமிழ்த்துகிறார்கள். அவர் செய்த குற்றம் என்ன? புரிந்த கொடுமை என்ன? சொல் உலகே சொல் (முடிந்ததும்)

பிலாத்து : பாஸ்குத் திருநாட்களில் உங்களுக்கு ஒரு குற்றவாளியை விடுதலை செய்வது வழக்கம். இங்கு இருக்கிறான் பரபாஸ். இவன் ஓர் கொலைபாதகன். அங்கு இருக்கிறான் உங்களுடைய அரசன். இவர்களில் யாரை விடுதலை செய்ய வேண்டும்? அந்தக் கொலைகாரனையா? அல்லது உங்களுடைய அரசனையா?

தலைவன் : இவனை அல்ல பரபாசை

யூதர் : இவனை அல்ல பரபாசை

பிலாத்து : அப்படி என்றால் உங்கள் கிறீஸ்துவை என்ன செய்ய வேண்டும்?

தலைவன் : சிலுவையில் அறைந்து கொல்லும்

யூதர் : சிலுவையில் அறைந்து கொல்லும்

பிலாத்து : அவனிடத்தில் எவ்வித குற்றமும் காணவில்லை

தலைவன் : பரபாசுக்கு விடுதலை

யூதர் : பரபாசுக்கு விடுதலை

தலைவன் : இவனைச் சிலுவையில் அறைந்து கொல்லும்

யூதர் : இவனைச் சிலுவையில் அறைந்து கொல்லும்

பிலாத்து : இவன் என்ன தீங்கு விளைத்தான்? இவனிடத்தில் மரணத் தீர்வைக்குரிய குற்றம் எதுவும் காணப்படவில்லை. இவனைத் தண்டித்து விட்டேன். இனி விடுதலையாக்குகின்றேன்.

எல்லோரும் : சிலுவையில் அறைந்து கொல்லும் !

பிலாத்து : இவனிடத்தில் ஓர் குற்றமும் காணேன். இவனை உங்கள் முன்பாக கூட்டி வருகிறேன்.

(யேசுவைக் கூட்டி வந்து)

இதோ மனிதன் !

எல்லோரும் : இவனைச் சிலுவையில் அறையும்

பிலாத்து : நான் இவனிடத்தில் எவ்வித குற்றத்தையும் காணவில்லை! ஆகையால் நீங்களே இவனை ஒப்புக்கொண்டு சிலுவையில் அறையுங்கள்.

கைப்பா : எங்களுக்கு வேதசட்டம் உண்டு. அதன்படி இவன் இறக்க வேண்டும். இவன் தான் கடவுளுடைய மகன் என்று கூறுகிறான்,

(இயேசுவுடன் பிலாத்து தனித்துப் பேசல்)

பிலாத்து : நீ எங்கே இருந்து வந்தாய் ... ... (மௌனம்) ............ என்னிடத்தில் பேசமாட்டாய். உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டு என்பதை அறிவாயா? அல்லது உன்னை விடுதலையாக்க அதிகாரம் உண்டென்பதையும் உணர்வாயா?

இயேசு : மேல் உலகத்தில் இருந்து உமக்குக் கொடுபடாதிருந்தால் என்மேல் உமக்கு எந்த அதிகாரமும் இருக்காது. ஆகையால் என்னை உம்மிடத்தில் கையளித்தவர்களுக்குத்தான் பெரிய பாவம் உண்டு.

(பிலாத்து வெளியேவர)

மக்கள் : அவனைக் கொல்லும் ! கொல்லும் !!

பிலாத்து : அவன் எவ்வித குற்றமும் செய்யவில்லை.

கைப்பா : இவனை விடுதலை செய்தால் நீர் செசார் அரசனுக்கு நண்பன் அல்ல.

பிலாத்து : கருத்தற்ற பேச்சு.

கைப்பா : இல்லை. அதுதான் எம் கலகத்தின் மூச்சு.

பிலாத்து : கலகம் அல்ல, களங்கம்.

கைப்பா : கலங்க வேண்டும்.

பிலாத்து : யார்?

கைப்பா : பிலாத்து.

பிலாத்து : யாருக்கு ?

கைப்பா : சேசாருக்கு !

பிலாத்து : எதற்கு ?

கைப்பா : துரோகத்திற்கு !

பிலாத்து : எப்படி ?

கைப்பா : சேசாருக்குப் போட்டி !

பிலாத்து : இந்த முடிவு ?

கைப்பா : எம்முடையது !

பிலாத்து : ஆகவே ?

கைப்பா : தப்பமுடியாது !

பிலாத்து : தப்பவைப்பது ?

கைப்பா : மடமையின் எல்லை !

பிலாத்து : தவற விடாதது ?

கைப்பா : எமது கடமையின் தொல்லை !

பிலாத்து : மதமும் அரசியலும் ?

**கைப்பா :** எமக்கு ஒன்று !

**பிலாத்து :** அதன்படி இவன் ?

**கைப்பா :** செசாருக்கு விரோதியாய் இருக்கிறுன். தன்னைத்தானே அரசன் என்று அழைக்கும் எவனும் செசாருக்குப் போட்டி விரோதி !!

**அன்னுஸ் :** ஆம் விரோதியாய் இருக்கிறுன் !

**மக்கள் :** ஆம் ! விரோதியாய் இருக்கிறுன் !!

( இயேசுவை வெளியே கொண்டு வரல் )

**பிலாத்து :** இதோ உங்களுடைய அரசன்

**மக்கள் :** ஒழிக, ஒழிக இவனைக் கொல்லும் கொல்லும் !!

**தலைவன் :** கொன்றுபோடும். கொன்றுபோடும்

**மக்கள் :** கொன்று போடும். கொன்றுபோடும்

**பிலாத்து :** உங்களுடைய அரசனை நான் எவ்வாறு சிலுவையில் அறைவது ?

**கைப்பா :** செசார் அல்லாது வேறு அரசன் எமக்கு இல்லை !

**அன்னுஸ் :** அவனைச் சிலுவையில் அறையும். அவனைச் சிலுவையில் அறையும் !!

**மக்கள் :** அவனைச் சிலுவையில் அறையும் !

**பிலாத்து :** (கைகழுவுதல்) இந்த நீதிமானுடைய இரத்தத்தின் மட்டில் எனக்கு பாத்தியமில்லை. அது என்மீது சிதருதிருக்கட்டும். நான் குற்றமற்றவனுக இருக்கிறேன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். சிலுவையில் அறைந்து கொல்லுங்கள்.

**தலைவன் :** அவனுடைய இரத்தம் எங்கள் பேரிலும் எங்கள் மக்கள் பேரிலும் இருக்கட்டும்.

## காட்சி 7

# பாரச் சிலுவை சுமக்கும் பாசம் நிறை அன்பு

**உரை :** மரண தண்டனை ... வாழ்வைப் பறிகொடுக்கும் அளவிற்கு அவர் என்ன செய்து விட்டார். ஆடைகளை அகற்றினர். அது போதாதா ? முள்முடி சூட்டினர். அதுவும் பற்ருதா ? துப்பினர்—தூற்றினர்—அடித்தனர்—அவமதித்தனர். ஐயோ ! கடைசி

யாகச் சிலுவை சுமத்தி கல்வாரிக்கு நடத்திச் சென்றனர். அன்பே தெய்வம். அவ்வன்பு பாரச்சிலுவையை மட்டுமல்ல பாவச் சுமையையும் சுமக்கின்றது.

(விழும் பொழுது விருத்தம்)

பாடல் :

கன்னியுடல் பால் குடித்த
—செவ்விரத்தம் ஓடியதோ
அன்னைமரி தந்த திருக்கால் கரங்கள் வாடியதோ
மண்ணிலே நீ மண்டும் அவலமிதைக் காண்பதற்கோ
கண்ணை யாம் பெற்றுள்ளோம்—நாதா

காதல் துணை கொண்டு நோவாலே புண்ணுடைய
பூவில் விழுந்திட்ட நாயகனே—சாவில்
கருணையின் எல்லையாம் கல்வாரி மலை இதோ
நடந்து செல்வாய் பரன்

செந்தூரியன் : பாவம்! இவன் மீண்டும் இந்தச் சிலுவையைச் சுமந்தால் கொலைக்களம் போகுமுன் இறந்து விடுவான் .. டேய்...ம்... இவனுக்கு உதவி செய் (சிமியோன் உதவுதல்)

பாடல் :

பலிக்களம் நோக்கி ஏகுதடா
செம்மறிப் புருவை இதோ
நிலை உடல் தளர்ந்து வேகுதடா
நிமலனின் நிழலும் வாடுதடா
கால் சோர்ந்து கை சோர்ந்து
கடின வழி தான் நடந்து
கசையடியும் வசை மொழியும்
இசை முழங்கிப் போகுதடா

இயேசு : ஜெருசலேம் மகளிரே ! எனக்காக அழாதீர்கள். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். ஒரு நாள் வரும். அன்று மலடிகள் பேறுபெற்றவர்கள்; பிள்ளைப் பேறற்ற உதரங்களும் பாலூட்டாத கொங்கைகளும் பாக்கியம் பெற்றன என்பார்கள். அப்பொழுது மலைகளைப் பார்த்து ''எங்கள் மேல் விழுங்கள். குன்றுகளைப்பார்த்து எங்களை மூடிக்கொள்ளுங்கள்''. என்று சொல்லத் தொடங்குவார்கள். பச்சை மரத்திற்கே இப்படிச் செய்கிறார்கள் என்றால் பட்டமரத்திற்கு என்ன தான் நேருமோ ?

**உரை :** யூதாஸ். ஆம்! குருத்துரோகம் புரிந்த யூதாஸ் முப்பது வெள்ளிக்காக மூர்த்தியைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்—குமுறிக் கொதிக்கும் இதயத்துடனும் குவலயப் பழியின் பாரத்துடனும் மனம் நொந்தான். மதி வெந்தான். அவன் புரிந்த பெரிய துரோகம் ஆண்டவன் அன்பில் அவநம்பிக்கைப்பட்டது தான். இரத்தக் காசை வீசி எறிந்தான். ஓடினன்! ஓடினன்! எங்கே?

**பாடல் :**

தப்பினைத் தெரிந்து செய்தேன்.
தர்மத்தின் தலையைக் கொய்தேன்
அப்பனின் அன்பைக் கண்டேன்
அர்ப்பன் என் அமைதி கொன்றேன்.
இப்பெரும் பழியைப் போன்று
இழைத்தவர் வாழ்தல் நன்றோ
ஒப்பரும் குருவே உன்னை
ஒரு கணம் உற்றுப் பாரேன்.

மனம் எங்கே! நிலை எங்கே!
மரம் எங்கே கிளை எங்கே
மடித்து முடியும் கயிறெங்கே
வாழ்வெங்கே வழியெங்கே
வாழ்ந்தும் என்ன பயனிங்கே!
இங்கே! இங்கே! இங்கே!

**உரை :** குருவை மும் முறை மறுதலித்தார் சீடன் இராயப்பர்; தவறிழைத்தார்! தற்பரனை எண்ணிக் கண்ணீர் வடித்தார். ஆனல், குற்றம் புரிந்தாலும்—அமைதி தெரியாது அலைந்தாலும்—உள்ளத்தில் நிறைந்த உருக்கம் உறைந்திருந்தாலும் ஆண்டவன் அன்பில் நம்பிக்கை இழக்கவில்லை.

**இராயப்பர் :** இறைவா! என்னை மன்னித்து விடு. மன்னித்து விடு. குற்றம் புரிந்த பாவி நான்! குவலயப்பழி சுமந்த கோழை நான். குருவைத் தெரியாதென்று மும் முறை மறுதலித்த மாபாதகன்-பாதகன்! இறைவா! மன்னிப்பாயா? இந்த ஏழை வடிக்கும் கண்ணீரை—இல்லை, இதயம் பிளக்கும் செந்நீரைப் பார்ப்பாயா? இறைவா அழுகின்றேன். அழுகின்றேன். அழுது கொண்டே இருக்கின்றேன்.

பாடல் :

கையிரு கால் அங்கமெலாம் தங்கமகன்
நொந்தவிந்து
தையலற்ற போர்வையிலும் சதை பதிந்து
சிலுவை திரு மற் புறத்தில் ஏந்தி
கடமை மலை சென்ருனே
எவ்விதத்தில் சார்வேன் இனி
அன்பினிலும் பண்பினிலும்
பாதையிலும் வாதையிலும்
திட்டமாய் வைத்தென்னைத் திடப்படுத்தி
பற்றுச் சிறையிலிட்டுக் காப்பாற்றி
சீமோனின் மகனே பேதுறு
சொல்லில் உறுதியாய் கற்பாறை
என அழைத்த வாக்கு ஐயோ
உன்னையிட்ட தீ உயர் குன்றிலே
என்னையிட்ட தீ உள் நெஞ்சிலே
பின்னலிட்ட தீ அலகை வஞ்சமே
யானும் செய்த தீவினையும் சூழுதே
வேகுதே நெஞ்சமது வெந்து சிறு
—பந்தும் ஆகுதே
பாவியேன் ஐயகோ சாகத்துணிவில்லாமல்
மறுதலித்தேன். மறுதலித்தேன்.
மறுவளர்த்தேன். மாசுற்றேன்.
மனுமகனே மரி மகனே
மன்னிப்புத்தா தா ! தா ! தா !

## காட்சி 8

# கல்வாரி மலை கண்ட கடவுள் திரு அன்பு

உரை : கல்வாரி மலை. அங்குதான் கடவுளின் கொலை. நண்பகல் வேளையிலும் நாயகன் படும் வேதனையைக் காண நாலாபக்கத்திலுமிருந்து திரண்டு தேங்கி வழிந்து நின்றது மக்கள் திரள் .. அப்போது... அங்கு ஆண்டவன் ஆடைகளை அகற்றுகின்றுர்கள். இரு

கரத்தையும் இறுகப்பிடித்து ஆணிகளை ஆவேசமாய் அறைகிறார்களே பாவிகட்குப் பரமனின் ஆசீரையும், பக்தர்களுக்கு பரிவு நிறை கருணையையும், பாலர்கட்கு பாசமுறு அரவணைப்பையும் பாதைதேடி வந்தோர்க்கு ஒளிவழியும் காட்டிய கரங்கள்—ஆணிகளால் துளைக்கப்படத்தான் வேண்டுமா? அமர தீபத்தை ஏற்றி அன்புப்பாதையைப் போற்றி, அருளின் நெறியைச் சாற்றி அலை கடலின் மீது அமைதியுடன் நடந்த அமலனின் திரு அடிகள் சிலுவையில் அறையப் படுகின்றன ஏன்? இது தான் அன்பு பெறும் பரிசா?...அமலன் உறும் கதியா? நீதியே உன் நாவெங்கே? அறமே உன் வாயெங்கே ? நெறியே உன் மொழி எங்கே? எங்கே?

அன்பே தெய்வம். அவ்வன்பு உயிரைப் பலியாகத் தியாகம் செய்யும் கட்டம்.

**தலை :** புதுமையிலே புது உலகைக் காட்டி, புனிதனின் வேஷத்தை மாட்டி பத்தியுடன் பவனி வந்த பசுபதியே, ஒரு கடைசி வேண்டுகோள் இறைவன் மகன் என்றால் இறங்கு உன் சிலுவை ஆசனத்தை விட்டு, அற்புதம் அதிசயம் எனக்கேட்கும் அன்பராகிய எமக்கு அத்தாட்சி அளி ம் ... ம் ...... சிலுவையை விட்டு இறங்கு...

**கைப்பாஸ் :** நாட்டின் நடுநாயகமென ஏடு போற்றும் ஏகதேவனின் கோவிலை, ஆண்டவன் வாழும் ஆலயத்தை அடியோடு அழித்து மூன்று நாட்களுக்குள் மூச்சோடு கட்டி முடிப்பேன் என முர சொலித்தான். மற்றவனை இரட்சித்தவன் இன்று தானே அகப்பட்டுத் தத்தளிக்கிறான். கர்ம வீரா? இதுதான் உனது மர்மமா? பார்க்கலாம் தப்பித்துக் கொள்...

**பரி 1 :** பாராள வந்த பட்டத்து மெசியாஸ், இஸ்ராயேல் இனத்தின் இதயமன்னனாய் இறங்கி வந்த இறைமகன் கிறீஸ்து! இவன் மெசியாஸ் என்றால் — மீட்பரென்றால் — சிலுவையை விட்டு கீழே இறங்கட்டும், ம் ... இறங்கி வா!

**அன்னாஸ் :** கடவுள் கடவுள் என்று கச்சிதமாய்க் கடவுளின் பெயரைச் சொல்லிக் காலம் கழித்தானே. கடவுளின் பத்தனென்றால் இப்போது கடவுளே வந்து இவனைக் காப்பாற்றட்டும். கடவுளின் திருமகன் ஆகா ...

**கைப்பாஸ் :** கடவுளின் திருமகன்! கடமையின் குருபரன்! பக்தி நிறை பாலன்! சத்திய நற்சீலன்! பாவத்திற்குக் காலன்! ஏ!...

**சது :** எண்ணற்ற புதுமை செய்த நீ இப்போது மரத்திலிருந்து மண்ணிலே இறங்கு, அப்பொழுது விண்ணகக் கடவுள் எனத் திண்ணமாய் நம்புவேன் ... ம் ...

**இயேசு :** பிதாவே ! பிதாவே ! இவர்கள் அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னித்து விடும்.

**தலை :** மன்னிக்கட்டுமாம். மன்னிப்பு! மாபெரும் கொடை வள்ளல் மகத்தான பரோபகாரி மன்னிக்கும்படி மன்றாடுகிறான்.

**அன்றாஸ் :** இல்லை. எம்மையெல்லாம் எள்ளி நகையாடுகின்றான் இந்தக் கொள்ளிவைக்க வந்த கோமகன்.

**சது :** பிதாவே! பிதாவே என்று பித்தனைப்போல் பிதற்றுகிறாயே— எங்கே பிதாவைக் காட்டு பார்க்கலாம்.

**அன்றாஸ் :** வான மேகத்தினூடாக வரும் மனுமகன் இப்போது மன்னிப்புக் கோரும் கட்டத்தில் மண்டிக் கிடக்கிறார்.

**விருத்தம் :**

தவறென உணர்ந்தும் தாழ்மை வழியினை
அறியா மாந்தர்
பவ இருள் படிந்த பாங்கை
பரிவுடன் பார்த்திரங்கி
பிழைதனை அறியாத் தீங்கு பிதற்றி
இன்றிழைக்கும் தீமை
பிதாவே நீர் பொறுப்பீர் என்றார்
பித்தனாய்ப் பேரன்பில் நின்றார்.

**கள்வன் 1 :** ஏ ! நீ கிறீஸ்து என்றால் முதலில் உன்னைக் காப்பாற்று அதன் பின் எம்மையும் காப்பாற்று.

**கள்வன் 2 :** உனக்கு ஆண்டவன் மட்டில் அச்சமில்லையா ? எமக்கு இத்தண்டனை கிடைத்தது நியாயம் தான். எமது செயலின் பலனை இப்போது அனுபவிக்கின்றோம். ஆனால்...... இவர்...... பாவம் ! குற்றமே அறியாதவர். நிரபராதி (ஆண்டவரைப் பார்த்து) இயேசுவே உம் அரசிற்கு வரும்போது அடியேனையும் நினைவு கூரும்.

**இயேசு :** இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று உறுதியாகச் சொல்லுகிறேன்.

விருத்தம் :

தீவினை செய்தும் தீயவழியினை வெறுத்து
—நொந்து
ஈசனின் தாளே—தஞ்சம் தாவென இரந்து
வெந்து
தாசனும் நல்லகள்வன் தவநிலை கண்டு
—இன்று
தேசமாம் பரகதியில் சேமமாய் இருப்பாய்
என்றார்.

இயேசு : அம்மா இதோ உன் மகன்! இதோ உன் தாய்!

விருத்தம் :

கருணைசேர் விழிகள் கண்ணீர் கடலிலே
கரைந்து ஆட
கடமையை முடிப்பாய் காதல் கனிமக
வென்றுபாட
காலடிதனிலே நின்ற கன்னியை நோக்கி
மைந்தன்
பார்திருத்தாயே பாசமாந்தரின் தாய் நீ என்றார்

இயேசு : ஏலோய், ஏலோய், லாமா சபக்தானி

(கடவுளே கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்)

போர்வீரன் 1 : பொறுங்கள், பொறுங்கள் யாரையோ கூப்பிடுகிறான்

,, 2 : யாரை என்ன! எலியாசைத்தான் கூப்பிடுகின்றான்.

,, 3 : எலியாஸ் ... பொறு பொறு...

,, 4 : எலியாஸ் இவனைக்காக்க வருவாரோ பார்ப்போம் (சிரித்தல்)

விருத்தம்

பாதகவாதை தானோ பாவமொய்ப்படலம் தானோ
காதகப் பிரிவு கொண்டு கடவுளே மறந்தாரென்று
வேதனை தாளாத் தூய போதகன் புலம்பி நின்று
வேண்டிடும் காட்சி வேலாய்ப் பாய்ந்திடும் உள்ளம்
சென்று.

இயேசு : நான் தாகமாய் இருக்கிறேன்.

போர்வீரன் 1 : டேய் தாகமாம்

,, 2 : என்னவாம்?

,, 3 : தாகமாம்.

,, 4 : கடற்காளானை காடியில் தோய்த்துக் கொடு! குடிப்பானோ பார்ப்போம்.

விருத்தம்

உலகநீர் ஊற்று எல்லாம் உதவாமல்
வற்றியதோ
உத்தமனின் வேதனையில் தாகவிடாய்
பற்றியதோ
நித்தியமும் ஆன்மவிடாய் அப்பனையும்
வாட்டி விட
சத்தியனும் சத்தமதாய் கத்துகிறான் காணீரோ.

போர்வீரன் 1 : டேய்! அதில் எனக்குத்தான் கூடிய பங்குண்டு அதை இங்கே கொடு.

,, 2 : அதை விடு அல்லது வாளை எடு.

போர்வீரன் 3 : சரி போரைத் தொடு

போர்வீரன் 4 : எதற்கு இந்த வீண் சண்டை. அரசன் ஒருவனின் ஆடை அணிகளுக்கு அளிக்கவேண்டிய மரியாதையைக் கொடுப்போம் ... ஹ ஹ ... கொஞ்சம் பொறுங்கள். இதிலே தையலில்லையே,

போர்வீரன் 1 : சீட்டுப் போடுவோம்

,, 2 : அதுதான் முறை

,, 3 : போடு சீட்டு

இயேசு : எல்லாம் முடிந்தது

போர்வீரன் 4 : முடிந்தது. முடிந்தது. சீட்டு எனக்குத்தான்

விருத்தம்

சோதனைக் களத்தில் நின்று பேய்தனை
முறித்து வென்று
வேதனைக் குளத்தில் நீந்தும் சேய்களை
அணைத்துச் சென்று
வானகம் திறந்தேன் மீட்பின் வாசலும்
திறந்தேன் ஞான
தானமாம் கடமை எல்லாம் நிறைவுற
முடித்தே நின்றார்.

**இயேசு :** தந்தையே! என் தந்தையே! என் ஆவியை உம் திருக்கரத்தில் ஒப்படைக்கின்றேன். (இறத்தல்)

**விருத்தம்**

பூமுகத்தின் சாந்தி ஒளி அகன்றதம்மா
பொங்கு மணிச் செங்கதிரோன் மறைந்ததம்மா
வானகத் தேன் அமுதமலர் குவிந்ததம்மா
வாடாத வளர் தீபம் அணைந்ததம்மா
ஞானமுகில் தவழுமலை சரிந்ததம்மா
நாதன் உயிர்ப்பலி நடந்து முடிந்ததம்மா
மாமரித் தாய் நெஞ்சமலர் பிளந்ததம்மா
மாசறியாச் செல்வனுயிர் பிரிந்ததம்மா
அம்மா! அம்மா!

## காட்சி 9

# கல்லறையும் கவிபாடும் கருணைநிறை அன்பு

**உரை :** இறைமகன் கிறீஸ்து இறந்தபின் இரவு நேரம் அண்மியதும் கிறீஸ்துவின் நண்பர்களான அரிமத்தியா ஊரைச் சேர்ந்த சூசை என்ற செல்வரும் நிக்கோதேமுஸ் என்ற மறைமுகச் சீடரும் தேசாதிபதி பிலாத்துவிடம் சென்று திரு உடலைப் புதைப்பதற்கு உத்தரவு கேட்டார்கள். அதை அவருக்கு அளித்து விட வேண்டுமென பிலாத்து கட்டளையிட்டான்.

**பாடல் :**

அதிபதி ஆணை ஆற்றிட ஏகி
துன்பமுகம் தரும் வன்மலை உச்சியில்
உயிர் உடல் தங்கி ஒழிந்திடக் கள்வர்
கால்களை வீரர்கள் தேடி முறித்து
கனிமகன் யேசு இறந்ததைக் கண்டும்
கண்ணிலர் போலக் கடியதாய் ஈட்டி
ஓங்கி உடம்பில் இதயம் இணைந்த விலாவை

மெய்யாய் மேலாய்ப் பாய்ச்சி நின்று
உதிரமும் நீரும் உயிரிலா நாதன்
ஒளி உடல் ஒழுகி வடிந்து விழுந்து
உள்ளம் உருக உற்றோர் கருக
போதனின் பேரன்பை நாமும் அறிந்தோம்.
பணபலச் சூசை பயனிறை சீடன்
உவந்த முகத்துடன் வந்து பணிந்து
மலையில் இருந்து மரத்தில் எழுந்து
ஆதியின் நாதனை அஞ்சலி செய்தார்.
உடல் உறை ஆணி அகற்ற முனைந்து
அடிகளின் வெம்மையில் ஆணியும் புதைந்து
சதையில் புகுந்து கிழித்துப் பிளந்த
மேலவன் மேனியில் வேதனை கண்டார்.
துஞ்சிக் குரிசிலே துயருற விரிந்த
பஞ்சிலும் மென்மைப் பரமனின் கரங்கள்
வருந்தித் தாங்கிய இரு இருப்பாணிகள்
மெல்ல எழுந்து மேனியைத் தாங்கி
ஆழ்கடல் துயரம் அமலனுக்களித்த
ஆதவ முட்கள் அணியுடன் சேர்ந்த
முள்முடி சென்று ஊன்றி அமர்ந்த
சிரசினில் நின்று வெளியே எடுத்து
மாபவ மானிடர் மாலையைக் கண்டு
மனது பொறுமல் அழுது புலம்பும்
தேவியாம் மாமரி தேம்பிடும் காட்சி
வதைத்திடும் பாரை சிதைத்திடும் தாயை.
தண் ஒளி குன்றிய வெண்மதிபோலும்
வாடி வதங்கி வளர்ச்சி வதங்கிட
செந்தீயில் பூங்கொடியு மாகியே
மரமதில் தொங்கிய திரு உடல் கீழே
நொந்து வருந்திடு மாமரி மடியில்
மலருறை கொடி பஞ்சணை மெத்தை
மாசறியாதவன் முத்தம் பொழிந்து
கம கம என்ற திரவிய வாசம்

கால் கைமேல் எலாம் ஆறித்தடவி
திடன் உறைவாசம் என உரை நின்ற
உடலம் காக்கும் கல்லறை செல்லு முன்
கடவுளின் சடலம் ஒழுங்குடன் சேர
தூய வெண் ஆடைக் கோடித் துணியால்
மேலும் கீழும் சுற்றினர் பக்சித்
திரு உடல்மேலே சீடர்கள் — பாரீர் !
நடுநிசி வேளை குகைதனில் பிறந்து
உளமும் இருண்ட உலகும் இலங்க
பேர் ஒளிசேர் பரன் தூதர்கள் வந்து
நிலை தடுமாறிய இடையர்கள் அறிய
மைந்தனும் இவர்தான் இரட்சகர் என்றே
மகிமைச் சேதியின் மகிதலபாலன்
மாமரி உதரம் மலர்ந்திடு மணியோன்
வடிவு இது தானோ வகை உரைப்பீரே.
வந்தவர் நொந்து குனிந்து சுமந்து
பையநடந்து கற்பாறை அடைந்து
வேறுடல் கண்டிடாக் கல்லறை ஒன்றில்
இறை உடல் மூடி இருள் அறைமூட

**உரை :** சாத்தான் சிரித்தது சரிந்துவிட்டான் திருமகன் என்று. சங்கம் சிரித்தது போட்டிக்கு வந்தவன் போய்விட்டான் என்று. சரித்திரம் சிரித்தது சாவிற்கு சவுக்கடி சமர்ப்பிக்கப்பட்டதென்று. கல்லறையைக் கண்டும் கல் நெஞ்சம் கரையவில்லை. கைப்பாஸ் என்ற தலைமைக் குருவிற்கும் அவன் குழுவினர்க்கும்

## காட்சி 10

# சாவை வென்ற சத்தியனின் நித்திய பேரன்பு

**உரை :** கடவுளுக்குக் கல்லறையா ?... கல்லறைக்கும் காவலா ? பகலவன் முன்னே பனித்துளியா ?... அலைகடல் முன்னே அசை துரும்பா ?... வாழ்வின் ஊற்றுமுன்னே சாவின் நாற்றமா ? அன்பே தெய்வம் அவ்வன்பு சாவை வெல்லுகின்றது. வரலாறே நீ வாய்திறந்து பேசு ... ஞாயிறு காலை ...

**தோகையரு :**

பூமி அதிர்ந்தது
புயலும் அசைந்தது
புதுமையும் ஒன்று புலர்ந்தது
விண்ணொளி மின்னிட
கண்ணிமை பின்னிட
கல்லறைக் கல்லுமோ சரிந்தது.

உத்தம நாதன் உயிர்த்தார் இன்று
சத்திய மூர்த்தி உயிர்த்தார் நன்று
நித்திய கிறீஸ்து உயிர்த்தார் என்றே
சங்கே முழங்கு
வெற்றிச் சங்கே முழங்கு.

**பாடல் :**

**பல்லவி**

அலகையைச் சாவில் வென்ற திருக்குமரா
திருமரிமாது கன்னி ஈன்ற அருட்குமரா—குமரா
அலகையைச்

**அனுபல்லவி**

சாவை மெய்யாக வென்ற சத்தியனே—துதி
பாடித் தொழுதிடுவோம் நித்தியனே—குமரா

**பாடல் :**

தேடியே காலையதில் கல்லறைக்கு—அழும்
பெண்கள் நினைத்தொழவும் விரைந்திடவே
ஆண்டவன் தூங்கிய கல்லறை மீது—சீர்
அமர்ந்த அழகு ஒரு கலை ஏடு.

**பாடல் :**

குருபரன் யேசு உரைத்தபடி—வல்ல
யூதரின் நிந்தைகட்கு மரித்தாரடி
விந்தையாய் வெற்றியுடன் எழுந்த நிலை
எங்கள் தவத்திரு ஏடு சொல்லும் தூய கதை.

நேசம் படைத்த மரிமதலேனுள்—கால்கள்
கடுகடுத்து தூய உடல் விழிக்க
ஓடிச்சென்றே அயர்ந்த ஒரு காட்சி மனம்
விஞ்சும் வியப்புயர்வின் திருமாட்சி

**வானதூதர் 2 :** அம்மா ! நீ எதற்காக அழுகின்ருய் ?

**மரியாள் :** என் ஆண்டவரை எங்கோ எடுத்துச் சென்று விட்டார்கள்: எங்கு வைத்தார்களோ தெரியவில்லை.

**இயேசு :** பெண்ணே ! எதற்காக நீ அழுகிருய் ? அம்மா யாரைத் தேடுகிருய் ?

**மரி. :** தேடுகின்றேன் தேடுகிறேன், தேடிக்கொண்டே இருக்கின்றேன். ஐயா அவரை நீர் தூக்கிக் கொண்டுபோயிருந்தால் எங்கு வைத்தீர் எனச் சொல்லும். அங்கெல்லாம் நான் சென்று அவரை எடுத்துச் செல்வேன். தயவு கூர்ந்து சொல்லும்.

**இயேசு :** மரியா !

**மரி. :** ஆண்டவரே !

**இயேசு :** என்னைத் தொடாதே. ஏனெனில் நான் மேலெழும்பி என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை. என் சகோதரர்களிடம் போய் என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் நான் எழும்பிச் செல்கின்றேன் என்று அறிவி ம்...

**பாடல் :**

குறுநகை செய்தாய் மின் ஒளியோடு—தவ
குலமகள் மதலேனுள் மரியோடு
திருவெழில் கோலங்கண்ட மொழி மாது வண்ண
திருப்பரன் அன்பு செய்த பவமாது

சேதி உடனறிந்து விழித்தெழுந்து—பெண்கள்
சொன்ன மொழி என்ன என உணர்ந்து
ஆவல் அறியச் சென்ற அன்பர் நிலை—இளம்
அருளப்பன் இராயப்பன் இதய நிலை.

**இயேசு :** என் தந்தை என்னை அனுப்பியது போல் நானும் உங்களை அனுப்புகின்றேன். தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாது விடுவீர்களோ அவை மன்னியாது விடப்படும்.

பாடல் :

கள்ளமில்லாமல் நம்பும் அடியவர்க்கு—அருள்
காட்சி தந்து உந்தன் கருணை தந்து ...
பிள்ளை மெய்க் காதலுடன் அணைப்பாயே அமுத
வளர் கிறீஸ்து நாதனே பரம் தா — நீ குமரா
அலகையைச் சாவில் வென்ற திருக்குமரா
திருமரி மாது கன்னி ஈன்ற அருட்குமரா.

உரை : உயிர்த்து எழுந்தபின் நாற்பது நாட்களாக தம் சீடர்களுக்குப் பல இடத்திலும் காட்சி அளித்தார். உரையாடினர். உறுதிப்படுத்தினர். உந்நத கடவுளின் உத்தம திட்டத்தை உணர்த்தினர். விண்ணரசை மண்ணில் நிறுத்தும் திண்ணமான எண்ணத்தை அறிவித்தார். இறுதியாக பரம தந்தையிடம் — பரமண்டலத்திற்கு எழுந்தருள பெத்தானியாவின் அருகிலுள்ள கலிலேயாவிற்குச் சென்றார்.

இயேசு : விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா சுதன் பரிசுத்த ஆவி பெயரால் அவர்களுக்கு ஞானத்தீட்சை அளியுங்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள்

இதோ! நான் உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடிருப்பேன்.

விருத்தம் :

பிறப்புற்றார் கன்னியிடம் — பேரன்புற்றார்
பேச்செல்லாம் அருள் மழையாய் — பொழியும்
ஞானச் சிறப்புற்றார் — தெய்வத்தின் நிறையும்
பெற்றார்
மண்ணதனில் பாவ இருள் சா அகலும் வண்ணம்
இறப்புற்றார்
காவல் பலம் சேர்ந்து நின்றும் கல்லறையின்
கட்டவிழ்த்து உயிர்த்தெழுந்தார்.
பொறுப்பெல்லாம் மானிலத்தில் சீடர் பெற்றார்
கதை முடியா நாயகனாய் கடந்து சென்றார்.

உரை : அன்பே தெய்வம். அது என்றும் எம்முடன் வாழ்கின்றது. ஆசீர் அளிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து வானகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவரை கண்ணிமை கொட்டாது நோக்கிக் கொண்டிருக்கையில்

( வானதூதன்தோன்றல் )

பாட்டு :

ஜெயம் ஜெயம் ஜெயமங்களம்
யேசுபரன் வானகம் சென்ருர்
வானகமும் வையகமும் தொழுதிடவே ஆண்டவனும்
தாயகமாம் தந்தையிடம் நாற்பதாம் நாளிலே
வல்லபன் எழுந்தார்

அருளப்பர் : ஆதியிலே வார்த்தை இருந்தார். அவ்வார்த்தை கடவுளிடம் இருந்தார். கடவுளாயும் இருந்தார்.

இராயப்பர் : காலத்தின் நிறைவிலே வார்த்தை மனித உருவம் தரித்தார். உருவிலான் உருவாகி, கன்னியின் உதரத்தில் கருவாகி, கனியாகி உலகத்தில் உலவினுர்.

அருளப்பர் : அவர் அன்பும் அருளும் உண்மையும் உத்தமும் நிறைந்து விளங்கினுர். அவரது மாட்சி கண்டோம். அதற்குச் சாட்சி நின்ருேம்.

யாகப்பர் : இன்பப் பெருக்காம் இறைவன் அன்பின் பிறப்பிடம். அன்பின் உறைவிடம். அன்பின் வடிவம் அன்பின் உருவம், அன்பேமயம்

இராயப்பர் : எவருமே இறைவனை என்றுமே கண்டதில்லை. தந்தையின் அணைப்பில் வாழும் தனிப்பெரும் திருக்குமரன் கிறீஸ்து ஒருவர் தான், அவரைப் பற்றி அறியத் தந்தார். அவரைக் கண்டோம். அவர் அன்பைக் கண்டோம். அந்த அன்பில் அனைவரும் அருளுக்கு மேல் அருளைப் பெற்றுள்ளோம். அவரது அழியாத — அணையாத அருள் சுரக்கும் அமல வாழ்வுதான்.

அன்பில் மலர்ந்த
அமர காவியம்

**விருத்தம் :**

தெய்வத்தின் அவதாரம் எனக் கூறிப்
பாருலகில் வாழ்ந்தவர் பலருமுண்டு
தெய்வீக நிறைவினில் நிலையான நாயகன்
கிறீஸ்து தான் ஒருவர் உண்டு
பாவியர் மக்கள் எல்லோருமே பருகிடப்
பரம அருள் அன்பு உண்டு
வானமும் பூமியும் வாழ்ந்திடவே
அன்பில் மலர்ந்த
அமர காவியமும் உண்டு.

V. J. Constantine
28/1, ST. JAMES WEST STREET
JAFFNA

அச்சகம் ,
ம். /70

ஆசிர்வாதம் அச்சகம் ,
யாழ்ப்பாணம். /70

# திருமறைக் கலா மன்றத்தின் ஒரு சில படைப்புக்கள்

கல்வாரியில் கடவுள்
சாவை வென்ற சத்தியன்
அன்பில் மலர்ந்த அமரகாவியம்
காட்டிக் கொடுத்தவன்
அமைதியின் அண்ணல்
கவலையின் எல்லை
சோதனைக் களம்
ஒரு துளி
கபட மனக் காவலன்
வா மகனே வா
உயிர் கொடுத்த உத்தமர்கள்
கோயில் கண்ட கொலை
இன்றிரவு
மூவேந்தர்
செந்தணல்
அமலன் காட்டிய வழி
சிங்ககுலச் செங்கோல்
கன்னிபெற்ற கடவுள்
களங்கம்

— திருமறைக் கலாமன்ற வெளியீடு